மல்கியா 4:2

யோவான் 17:17

நீதியின் சூரியன் உதிக்கும்
அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்
உம்முடைய வசனமே சத்தியம்

# புது உடன்படிக்கை

மில்லினிய வேதாகம சத்திய இயக்கம்

*Vol. 121* *மார்ச் 2026*

## இரு பஸ்காக்கள் – சுவிசேஷ யுக மற்றும் மில்லினிய யுக பஸ்காக்கள்

***E Vol.8, Chapter 9, pp. 603-620***

***எண். 9:1-14***

இந்தக் கட்டுரையில் கொடுக்கப்பட்ட ①②③④ என்ற குறிப்புகளை, பக்கம் 2-ல் கொடுக்கப்பட்ட படத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்

### வருடாந்தர பஸ்காவும்③, கர்த்தருடைய இராப்போஜனத்தின் வருடாந்தர அனுசரிப்பும்④

*1.* பொதுவாகச் சொன்னால் எகிப்தில் அனுசரிக்கப்பட்ட அசல் பஸ்காவின் நிஜ நிறைவேறுதலுக்கும், அதின் வருடாந்தர அனுசரிப்பின் நிஜ நிறைவேறுதலுக்கும், இடையிலுள்ள வித்தியாசம் இவ்வாறாயிருக்கிறது: (1) அசல் அனுசரிப்பானது, நம்முடைய ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் உண்மை நிகழ்வான பலியையும் சுவிசேஷ யுகத்தில் சபை வகுப்பார் அவர்களுடைய பிரதிஷ்டையின் பாதை முழுவதிலும், அவர்களுடைய நியாயமாகுதலாகிய கிறிஸ்துவை அவர்களுக்குரியதாக ஆக்கிக்கொள்வது (போஜனம் பண்ணுவதை) அடையாளப்படுத்தும் (1கொரி. 5:7,8); (2) வருடாந்தர பஸ்காவானது, கர்த்தருடைய இராப்போஜனத்தின் வருடாந்தர அனுசரிப்பை அடையாளப்படுத்தும். வருடாந்தர பஸ்காவில் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டிக்கு, எகிப்தில் அடிக்கப்பட்ட அசல் ஆட்டுக்குட்டியோடிருந்த தொடர்பானது, கர்த்தருடைய இராப்போஜனத்திற்கு நம்முடைய ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் பலியோடிருக்கிற தொடர்பை அடையாளப்படுத்துகிறது (1கொரி. 11:24-26).

### முதல் வருடாந்தர அனுசரிப்பில்③, நிஜ நிறைவேறுதலான உண்மையான விருந்தின்② சில அம்சங்களும் காண்பிக்கப்பட்டிருக்கின்றன

*2.* மேலே குறிப்பிட்ட காரியங்கள் பொதுவான கருத்தை வெளிப்படுத்துகின்றன. இருந்தாலும் எண். *9:1-14* வரையுள்ள வசனங்களில் விவரிக்கப்பட்ட, முதல் வருடாந்தர அனுசரிப்பில்③, நிஜ நிறைவேறுதலான உண்மையான விருந்தின்② சில அம்சங்களும் காண்



பிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது இந்த முதலாம் வருடாந்தர அடையாளமான அனுசரிப்பிலும், வருடாந்தர நிஜ நிறைவேறுதலான பண்டிகையிலிருந்து④ (*annual symbolic feast* - கர்த்தருடைய இராப்போஜனம் என்ற சின்னத்தின் வருடாந்தர அனுசரிப்பு) தனிப்பட்ட அம்சங்களாகிய நிஜ நிறைவேறுதலான உண்மை நிகழ்

## தூது நிரல்

1. இரு பஸ்காக்கள்.............................................1
2. வழியும் சத்தியமும் ஜீவனும்.........................12
3. சிலுவையில் அறையப்படுதல் - மனிதனை மீட்டுக் கொள்வதற்கு ஏன் அவசியமானது...............................................17
4. கண்களால் காண முடியாத கோடு...............18
5. அலெக்ஸாந்தர் என்பவரும் கடன் தீர்க்க வகையற்றுப் போன ஒருவனும்...................19

| | நிழல் | நிஜ நிறைவேறுதல் |
|---|---|---|
| உண்மை நிகழ்வு (அசல்) | எகிப்தில் பஸ்கா ஆட்டுக்குட்டியின் பலி மற்றும் அதன் மாம்சத்தை உட்கொள்ளுதல் ① | நமது கர்த்தருடைய பலி மரணம் மற்றும் அவருடைய மனுஷீக பலி புண்ணியத்தை தனதாக்கிக்கொள்ளுதல் (நியாயமாகுதல் - உண்மை நிகழ்வான நிஜ நிறைவேறுதலான போஜனம்) ②<br>• சுவிசேஷ யுக நியாயமாகுதல்<br>• மில்லினிய யுக நியாயமாகுதல் |
| ஞாபகார்த்தம் | பஸ்கா ஆட்டுக்குட்டியின் வருடாந்திர ஞாபகார்த்தம் (எண். 9:1-14)<br>• முதல் மாத ஞாபகார்த்தம்<br>• இரண்டாம் மாத ஞாபகார்த்தம் ③<br>சில அம்சங்கள் | நமது கர்த்தருடைய பலி மரணத்தின் வருடாந்திர ஞாபகார்த்தம் [கர்த்தருடைய ராப்போஜனம்]<br>• சுவிசேஷ யுக அனுசரிப்பு<br>• மில்லினிய யுக அனுசரிப்பு ④ |

வான பண்டிகையின்② (கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் இரட்சிப்படைவதின்) சில அம்சங்களும் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. ஆம், நிஜ நிறைவேறுதலான உண்மை நிகழ்வான பண்டிகையின்② சுவிசேஷ யுக அம்சங்கள் மட்டுமல்ல, மில்லினிய யுகத்திற்குரிய சில அம்சங்களும் அதில் நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வரப் படுகின்றன. அந்த அம்சங்களுக்கு வரும் போது அதை நாங்கள் சுட்டிக் காட்டுவோம். இந்த காரியத்தை வாசகர்களின் கவனத்திற்கு இப்போதே கொண்டு வரு வதற்கு காரணமென்னவென்றால், முன்பு சொல்லப்பட்ட விதிக்கு எவ்வித விதி விலக்கும் இல்லை என்ற தவறான புரிந்துகொள்ளுதலைத் தடுப்பதென்பதாகும். நாங்கள் முன்பு குறிப்பிட்ட பொதுவான விதியை திரும்பவும் கொடுக்கிறோம்: *(1)* எகிப்தின் அசல் பஸ்கா① நம் முடைய ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவையும், சபை வகுப்பாரின் பிரதிஷ்டையின் ஓட்டம் முழுவதிலும் அவர்களுடைய நியாயமாகுதலுக்காக அவர்கள் கிறிஸ்து வைத் தனதாக்கிக் கொள்வதையும்② அடையாளப் படுத்துகிறது, *(2)* வருடாந்தர பஸ்கா③ கர்த்தருடைய வருடாந்தர இராப்போஜனத்தை④ அடையாளப்படுத்து கிறது.

## கர்த்தருடைய இராப்போஜனத்தின் வருடாந்தர அனுசரிப்பின்④ அடையாளமாகிய வருடாந்தர பஸ்கா③

*3.* *எண். 9:1-5* அவர்கள் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் வருஷம் முதலாம் மாதத்தில் கர்த்தர் சீனாய் வனாந்தரத்தில் மோசேயை நோக்கி: குறித்த காலத்தில் இஸ்ரயேல் புத்திரர் பஸ்காவை ஆசரிக்கக்கடவர்கள். இந்த மாதம் பதினாலாந்தேதி அந்தி நேரமான வேளையாகிய குறித்த காலத்தில் அதை ஆசரிக் கக்கடவீர்கள்; அதற்குரிய எல்லாக் கட்டளையின்படி யேயும் முறைமைகளின்படியேயும் அதை ஆசரிக்கக் கடவீர்கள் என்றார். அப்படியே பஸ்காவை ஆசரிக்கும் படி மோசே இஸ்ரயேல் புத்திரருக்குக் கட்டளையிட்டான். அதினால் முதலாம் மாதம் பதினான்காம் தேதி அந்திநேரமான வேளையில், சீனாய் வனாந்தரத்தில் பஸ்காவை ஆசரித்தார்கள்; கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் இஸ்ரயேல் புத்திரர் செய்தார்கள்.

## கர்த்தருடைய இராப்போஜனம் சுவிசேஷ யுகத்தில் பிரதிஷ்டை செய்தவர்களால் வருடாந்தரம் நிசான் 14-ம் தேதி அனுசரிக்கப்பட வேண்டும்

*4.* இந்த பொது விதிக்கு இணக்கமாக நாங்கள் பின்வரும் காரியங்களைப் புரிந்து கொள்கிறோம்: இஸ்ரயேலர்கள் முதலாம் வருடாந்தர பஸ்காவை③ அனு சரிக்க வேண்டுமென்று அவர்களுக்குக் கட்டளையிட வேண்டுமென்று கர்த்தர் மோசேக்குக் கொடுத்த கட்டளையானது (எண். *9:1-3*) பின்வரும் காரியத்தை அடையாளப்படுத்துகிறது: *(1)* முதன்மையான நிலையில், நம்முடைய கர்த்தர் வருடாந்தர இராப்போஜனத்தை④ ஸ்தாபிக்க வேண்டுமென்றும், சபை வகுப்பார் அதை வருடந்தோறும் அனுசரிக்க வேண்டுமென்று அவர் அவர்களுக்கு நேரடியாகப் போதிக்க வேண்டுமென்றும் (*லூக். 22:19; 1*கொரி. *11:24,25*) நம்முடைய கர்த்தருக்குத் தேவன் கட்டளையிடுவது, மற்றும் *(2)* இரண்டாம் நிலையில், சபை அதை வருடாந்தரம் அனுசரிக்க வேண்டு மென்று அப்போஸ்தலர்களின் மூலமும் (*1*கொரி *11:23-34*), சுவிசேஷ யுகம் முழுவதும் மற்ற சத்திய ஊழியக் காரர்களின் மூலமும் போதிக்க வேண்டுமென்று தேவன் நம்முடைய கர்த்தருக்குக் கட்டளையிடுவது.

*5.* இந்தக் கட்டளை சீனாய் வனாந்தரத்தில் கொடுக்கப்படுவதென்பது, அது சுவிசேஷ யுகத்திற்குரிய காரியமாகும், அதாவது சபையின் வனாந்தர அனுபவங் களுக்குரிய ஒரு கட்டளையாகும் என்பதை அடையாளப்படுத்துகிறது. அது இரண்டாம் வருஷம் முதலாம் மாதத்தில் செய்யப்படுவதென்பது, பின்வரும் கருத்தைத் தெரிவிக்கிறது: கர்த்தருடைய வருடாந்தர

இராப்போஜனத்தை முதல் முறையாக அனுசரிப்பதற்கான கட்டளையானது, அது எந்த காரியத்தின் (உண்மையின்) அடையாளமாகவும் ஞாபகார்த்தமாகவும் இருக்கிறதோ, அந்த உண்மை நிறைவேற்றப்படத் தொடங்கின பிறகு தான் (யோவா. 6:32-58) அந்த கட்டளை கொடுக்கப்பட்டது என்பதைக் காண்பிக்கிறது. மேலும் வருடாந்தர இராப்போஜனத்தில் பங்கு கொள்வதென்பது, பிரதிஷ்டைக்குப் பிறகு செய்யப்படுவது ஏற்றதாகும் என்பது, இஸ்ரயேலர்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட பிறகு அடையாளமான பஸ்காவின் அனுசரிப்பிற்கான கட்டளை கொடுக்கப்பட்டது என்பதின் மூலம் அடையாளப்படுத்தப்படுகிறது. மேலும் அடையாளமான வருடாந்தர பஸ்காவை அனுசரிக்க வேண்டியவர்கள் இஸ்ரயேல் புத்திரராக இருந்தார்கள் என்பதின் மூலமும் அடையாளப்படுத்தப்படுகிறது.

*6.* அடையாளமான பஸ்கா③ அதற்குரிய குறித்த காலமாகிய நிசான் *14*-ம் தேதி அன்று ஆசரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையானது, கர்த்தருடைய இராப்போஜனமும்④ நிசான் *14*-ம் தேதி அன்று ஆசரிக்கப்பட வேண்டுமென்ற கட்டளையை அடையாளப்படுத்துகிறது. நம்முடைய கர்த்தரும் அதை அவ்வாறே கூறி இருந்தார்: நீங்கள் இதைச் செய்யும் போதெல்லாம் (அடையாளமான ஆட்டுக்குட்டியை அடித்து, அதைப் புசிக்கும் போதெல்லாம்) என்னை நினைவு கூரும்படி இதைச் (கர்த்தருடைய இராப்போஜனத்தை) செய்யுங்கள் (அனுசரியுங்கள்). அடையாளமான அசல் பஸ்காவின்① அடையாளமான பிரதிநிதித்துவமும், ஞாபகார்த்தமும்③ ஒவ்வொரு வருடமும் அதின் ஆண்டு நினைவு நாளில் அனுசரிக்கப்பட்டது என்ற உண்மையானது பின்வரும் காரியத்தை அர்த்தப்படுத்துகிறது: வருடாந்தர பஸ்காவின்③ நிஜ நிறைவேறுதலாகிய கர்த்தருடைய இராப்போஜனமும்④ நம்முடைய ஆட்டுக்குட்டியானவரின் மரணத்தின் ஆண்டு நினைவு நாளில், அதாவது நிசான் *14*-ம் தேதி அன்று அனுசரிக்கப்பட வேண்டும். ஏனென்றால் கர்த்தருடைய இராப்போஜனமென்பது④ நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்துவின்② அடையாளமான பிரதிநிதித்துவமாகவும் ஞாபகார்த்தமாகவும் இருக்கிறது. நிஜ நிறைவேறுதலில் இது இன்னும் பொருத்தமாயிருக்கிறது. ஏனென்றால் எகிப்தில் நிகழ்ந்த அசல் பஸ்காவின்① இரவுக்கு, முழு சுவிசேஷ யுகமும் நிஜ நிறைவேறுதலாயிருக்கிறது. ஆனால் வருடாந்தர பஸ்காவுக்கு③ கர்த்தருடைய வருடாந்தர இராப்போஜனம்④ நிஜ நிறைவேறுதலாயிருக்கிறது.

*7.* வருடாந்தர ஆட்டுக்குட்டியும்③, அசல் ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்ட அதே நேரத்தில் (யாத். *12:6*) அடிக்கப்பட வேண்டியதாயிருந்தது. "இரு சாயங்காலங்களுக்கிடையில்" (*between the two evenings – KJV* பக்க குறிப்பு) அதாவது மாலை ஆறு மணிக்கு அடிக்கப்பட வேண்டியதாயிருந்தது (எண். *9:3*). நம்முடைய கர்த்தர் மரிக்கும் அதே நாளில் கர்த்தருடைய இராப்போஜனம் முதல் முறையாக அனுசரிக்கப்பட வேண்டுமென்பதை இது குறிப்பிடுகிறது. மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் பவுல் எழுதின காரியங்களின் மூலம் வேதாகமம் இதை வலியுறுத்துகிறது (1கொரி. *11:23*). வருடாந்தர அடையாளத்தை அனுசரிக்க வேண்டிய காலம் சம்பந்தமாக சரியான தேதி வலியுறுத்தப்படுவதென்பது, நிஜ நிறைவேறுதலும் ஒவ்வொரு வருடமும் அதே தேதியில் அனுசரிக்கப்பட வேண்டும் என்ற உண்மையை வலியுறுத்துகிறது.

## கர்த்தருடைய இராப்போஜனம் அதனுடைய நடைமுறைகள் மற்றும் போதனைகளுக்கு இணக்கமாக அனுசரிக்கப்பட வேண்டும்

*8.* அடையாளமான பஸ்காவை③ அதற்குரிய எல்லா கட்டளைகளின் படியேயும் (எபிரெய வார்த்தை "கோக்" - இது பஸ்கா சம்பந்தப்பட்ட நடைமுறைகளைக் குறிக்கிறது) முறைமைகளின் படியேயும் (மிஷ்பாத்; சொல்லர்த்தமாக நியாயங்கள் அல்லது நியமங்கள் - இது அது சம்பந்தப்பட்ட போதனைகளைக் குறிக்கிறது) ஆசரிக்கப்பட வேண்டும் என்ற கட்டளையானது, ஞாபகார்த்த இராப்போஜனமானது④, யெஷுஆ அதை முதலில் ஸ்தாபித்தபோது கொடுத்த நடைமுறைகளின் படியும், அங்கே அவர் கொடுத்த போதனைகளின்படியும், சுவிசேஷ யுகம் முழுவதும் அனுசரிக்கப்பட வேண்டுமென்று கர்த்தர் கொடுத்த கட்டளையை அடையாளப்படுத்துகிறது. பிற்காலத்தில் அவர் அவருடைய அப்போஸ்தலர்களின் மூலம் இந்த நடைமுறைகளையும் போதனைகளையும் விளக்கிக் கொடுத்தார்.

*9.* நிஜ நிறைவேறுதலான நடைமுறைகள் இவ்வாறாக இருந்தன: *(1)* அடையாளமான ஆட்டுக்குட்டிக்குப் பதிலாகப் புளிப்பில்லா அப்பமும் திராட்சரசமும் உபயோகிக்கப்பட வேண்டும் (மத். *26:26-28*; மாற். *14:22-24*; லூக். *22:19, 20*; *1* கொரி. *11:23-25*), *(2)* அடையாளத்தின் படி அது ஒவ்வொரு வருடமும் அதே மாதத்தில் அதே நாளில் (மாலை வேளையில் இராப்போஜனமாக - 1கொரி. *11:25 ASV- after supper*) அனுசரிக்கப்பட வேண்டும், *(3)* அடையாளமான பண்டிகைக்கு முன் அடையாளமான புளிப்பு அகற்றப்பட்டதைப் போல் (யாத். *13:7*), ஒவ்வொரு வருடமும் அந்த அனுசரிப்புக்கு முன் நிஜ நிறைவேறுதலான புளிப்பு அகற்றப்பட வேண்டும் (1கொரி. *5:7, 8; 11:28*), *(4)* அடையாளத்தில் கசப்பான கீரைகள் உபயோகிக்கப்பட்டதைப் போல் (யாத். *12:8*) சோதனை மயமான அனுபவங்களின் மத்தியில் அதில் பங்கு கொள்ள வேண்டும் (மத். *26:31*; *1* கொரி. *11:31, 32*), *(5)* அடையாளமான வருடாந்தர ஆட்டுக்குட்டியில் விருத்தசேதனம் பண்ணப்பட்டவர்கள் மட்டுமே பங்கு கொள்ளக் கூடியதாக இருந்ததைப் போல் (யாத். *12:43-49*), பிரதிஷ்டை செய்தவர்கள் மட்டுமே கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கு கொள்ளக்கூடும் (முதலில் அனுசரிக்கப்பட்ட கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கு கொண்ட பதினொரு பேர் பிரதிஷ்டை செய்தவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்கள்).

*10.* கர்த்தருடைய இராப்போஜனத்தோடு④ சம்பந்தப்பட்ட நிஜ நிறைவேறுதலான நியாயங்கள் அல்லது நியமங்கள் (போதனைகள்) இவ்வாறாயிருந்தன: *(1)* மீட்கும் பலி, *(2)* விசுவாசத்தினால் நியாயமாகுதல் (மத். *26:28*; மாற். *14:24*), மற்றும் *(3)* அடையாளமான ஆட்டுக்குட்டியின் மூலம் காண்பிக்கப்படவில்லையென்றாலும், கசப்பான கீரைகளின் மூலம் அடையாளப்படுத்தப்படுகிற சபையின் கூட்டு பலி (யெஷுஆவுடன் சபை செய்கிற கூட்டு பலி). இதைக் கர்த்தராகிய யெஷுஆ லூக்.*22:20*-ம் வசனத்தில் போதிக்கிறார். கிரேக்க இலக்கணத்தின் படி

இவ்வசனத்தின் சரியான மொழிபெயர்ப்பு இவ்வாறாயிருக்க வேண்டும்: *“உங்களுக்காக ஊற்றப்பட்டுக்கொண்டிருக்கிற இந்த பாத்திரம் என்னுடைய ரத்தத்தினாலே புது உடன்படிக்கையாயிருக்கிறது”.* சபை வகுப்பார் அனுபவிக்கும்படி தேவன் ஏற்பாடு செய்கிற பாடுகள் (பாத்திரம்) யெஷுஆவின் பலி புண்ணியத்தினாலே புது உடன்படிக்கையின் முத்திரையாயிருக்கின்றன. பவுல் அப்போஸ்தலரும் கூட *(1கொரி. 10:16,17)* அப்பமும் திராட்ச ரசமும், பாவ நிவாரண பலியில் யெஷுஆவோடு சபைக்கு இருக்கிற பங்கை அடையாளப்படுத்துகிறது என்று காண்பிக்கிறார்.

*11.* எண். *9:2,3*-ம் வசனங்களில் யெஷுஆ கர்த்தருடைய இராப்போஜனத்தை ஸ்தாபித்து, அவருக்குச் சொந்தமானவர்கள் அதை அனுசரிக்க அவர்களுக்குக் கட்டளையிட வேண்டுமென்று தேவன் யெஷுஆவுக்குக் கொடுத்த கட்டளை அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் போது, யெஷுஆ அந்தக் கட்டளைகளை நிறைவேற்றுவது எண்.*9:4*-ம் வசனத்தில் அடையாளப்படுத்தப்படுகிறது. இஸ்ரயேலர்கள் வருடாந்தர பஸ்காவை③ ஆசரிக்க வேண்டுமென்று மோசே அவர்களுக்குக் கட்டளையிடுவதென்பது, யெஷுஆவுக்குச் சொந்தமானவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை④ அனுசரிக்க வேண்டுமென்று யெஷுஆ அவர்களுக்குக் கொடுத்த கட்டளையை அடையாளப்படுத்துகிறது. யெஷுஆ முதலாம் இராப்போஜனத்தை ஸ்தாபிப்பதை இது அர்த்தப்படுத்துகிறது. இவ்வசனத்திலுள்ள வார்த்தைகளைக் கவனிக்கும்போது; கர்த்தருடைய இராப்போஜனத்தை அனுசரிப்பதென்பது கர்த்தருடைய ஜனங்களுக்குக் கொடுக்கப்படுகிற கட்டளையாயிருக்கிறது.

*12.* இஸ்ரயேலர்கள் பஸ்காவை ஆசரிப்பதென்பது, அதாவது ஆட்டுக்குட்டியை அடித்து அதை நெருப்பினால் சுட்டு புளிப்பில்லா அப்பத்தோடும் கசப்போடும் அதைப் புசிப்பதென்பது, சுவிசேஷ யுக இஸ்ரயேலர்கள் அப்பத்தையும் திராட்ச ரசத்தையும் பிரதிஷ்டை செய்து, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லா அப்பத்தோடும் *(1கொரி 5:8)*, அவர்களுடைய பிரதிஷ்டையின் காரணமாக அவர்களுக்கு வருகிற புறம்பான மற்றும் உள்ளான சோதனைகள், பாடுகள் மற்றும் துன்புறுத்தல் என்னும் கசப்புடனும் *(2தீமோ.3:12)* புசிப்பதை அடையாளப்படுத்துகிறது. அவர்கள் நிசான் *14*-ம் தேதி அன்று செய்வதென்பது, சபை வகுப்பார் ஞாபகார்த்தத்தை நிசான் *14*-ம் தேதி அன்று அனுசரிப்பதை அடையாளப்படுத்துகிறது. இஸ்ரயேலர்கள் அதைச் சீனாய் வனாந்தரத்தில் செய்வதென்பது, சபை வகுப்பார் அதை அவர்களுடைய வனாந்தர அனுபவங்களில், இன்னும் விசேஷமாக அறுவடைகளின் காலங்களில் அதைச் செய்வதை அடையாளப்படுத்துகிறது. கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டபடியெல்லாம் இஸ்ரயேலர்கள் அதைச் செய்வதென்பது, அதாவது எல்லா கட்டளைகள் மற்றும் நியமங்களுக்கு இணக்கமாக அதைச் செய்வதென்பது, யெஷுஆவுக்குச் சொந்தமானவர்களுக்கு அவர் போதிக்க வேண்டுமென்று தேவன் யெஷுஆவுக்குக் கட்டளையிட்ட எல்லா நடைமுறைகள் மற்றும் போதனைகளுக்கு இணக்கமாக ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் அதைச் செய்வதை அடையாளப்படுத்துகிறது. அவர்கள் விசேஷமாக அதை அறுவடை காலங்களில் செய்தார்கள்.

*13.* எண். *9:1-5* வரையுள்ள வசனங்களில் சொல்லப்பட்ட இந்த அடையாளங்கள் கர்த்தருடைய இராப்போஜனத்திற்குப் பொருந்துகின்றன. ஆனால் நாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல், யூத யுகத்தின் வருடாந்தர பஸ்காக்கள் பொதுவாகச் சுவிசேஷ யுகத்தின் கர்த்தருடைய இராப்போஜனத்தை அடையாளப்படுத்தினாலும், முதலாம் வருடாந்தர பஸ்காவில் (எண். *9:1-5* வரையுள்ள வசனங்களில்), நிஜ நிறைவேறுதலான உருவகமான போஜனத்திலிருந்து தனிப்பட்ட ஒன்றாகச், சுவிசேஷ யுகம் முழுவதும் அனுசரிக்கப்பட்ட நிஜநிறைவேறுதலான உண்மையான போஜனத்திற்கு பொருந்தும் சில அம்சங்களும் போதனைகளும் இருக்கின்றன. மேலும் அதில் குறிப்பிடப்பட்ட அம்சங்களும் கட்டளைகளும் (எண்.*9:6-14*) மில்லினிய யுகத்தின் உண்மையான போஜனத்தையும் குறிப்பிடுகின்றன. இவைகள் எண். *9:6-14* வரையுள்ள வசனங்களில் அடையாளமாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இப்போது நாம் அவைகளைக் கவனிப்போம். அது பிரயோஜனமுள்ள ஆய்வாக இருக்குமென்று நாங்கள் நம்புகிறோம்.

## யூத யுகத்தின் வருடாந்தர பஸ்காவில்③ நிஜ நிறைவேறுதலான உண்மையான போஜனத்திற்குப்② பொருந்தும் சில அம்சங்கள் மற்றும் போதனைகள்

*14.* எண். *9:6-8* வரையுள்ள வசனங்களில் கொடுக்கப்பட்ட நிகழ்வுக்கு மிகவும் கவனத்தை ஈர்க்கிற நிஜ நிறைவேறுதல் இருக்கிறது.

*15.* எண். *9:6-8* அந்நாளில் சிலர் மனித பிரேதத்தினால் தீட்டுப்பட்டபடியினால் பஸ்காவை ஆசரிக்கத் தகாதவர்களாயிருந்தார்கள்; அவர்கள் அந்நாளிலே மோசேக்கும் ஆரோனுக்கும் முன்பாக வந்து: நாங்கள் மனித பிரேதத்தினால் தீட்டுப்பட்டவர்கள்; குறித்த காலத்தில் இஸ்ரயேல் புத்திரரோடேகூடக் கர்த்தருக்குக் காணிக்கையைச் செலுத்தாதபடிக்கு, நாங்கள் விலக்கப்பட்டிருக்கவேண்டியது என்ன என்றார்கள். மோசே அவர்களை நோக்கி: பொறுங்கள்; கர்த்தர் உங்களைக்குறித்துக் கட்டளையிடுவது என்ன என்று கேட்பேன் என்றான்.

## உலகத்தாரின் ரட்சிப்பைக்குறித்து நம்முடைய கர்த்தராகிய யெஷுஆவின் மனதில் எழும்பிய கேள்வி

### மனித பிரேதத்தினால் தீட்டுப்பட்டவர்கள்

*16.* நிசான் *14*-ம் தேதி அன்று மனித பிரேதத்தினால் தீட்டுப்பட்டு, பஸ்காவை ஆசரிக்க தடை செய்யப்பட்டவன், தங்கள் முழு வாழ்க்கையையும் ஆதாமினால் வந்த சாபத்தின் கீழ் கழித்து அந்த சாபத்தின் கீழ் மரித்தவர்களை அடையாளப்படுத்துகிறது (எண். *19:11-18; Tabernacle Shadows pp.105-110*). இவ்வசனத்தில் சொல்லப்பட்ட மரித்தவன் ஆதாமைக் குறிக்கிறான். அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருக்கிற நாம் அனைவரும் *(எபே.2:1,5)* ஆதாமிடமிருந்து மரபு வழியாகச் சீர்கேட்டையும் (தீட்டுப்பட்ட நிலை) தண்டனையையும் பெற்றுக் கொள்கிறோம். இவ்வாறாக நாம் உருவகமாக ஆதாம் (பிரேதம்) இருக்கிற இடத்தில் இருக்கிறோம். மேலும் அவ்வித சீர்கேட்டினால் நாம் பாவ செயல்களில் ஈடுபடும்போது, உருவகமான கருத்தில் ஆதாமைத் (பிரேதத்தை) தொடுகிறோம்.

*17.* அடையாளத்தில் இவ்வாறு தீட்டுப்பட்ட வர்கள், நிசான் *14*-ம் தேதிக்கு முன்பு வரும் ஏழு நாட்களுக்குள் ஒரு பிரேதம் இருக்கும் இடத்திலிருந்த வர்களாக அல்லது அதைத் தொட்டவர்களாக இருந் தார்கள். ஆகையால் அவர்கள் இவ்வாறு தீட்டுப் பட்ட தற்கு ஏழு நாட்களுக்குள் பஸ்கா வரும்போது (எண். *19:11, 12, 14, 16, 19*) அவர்கள் தீட்டுப்பட்ட நிலையிலிருந் ததினால், பஸ்காவில் பங்கு கொள்ளக் கூடாததாக இருந்தது. இது பின்வரும் உண்மையை அடையாளப் படுத்துகிறது. நிஜ நிறைவேறுதலான நிசான் *14*-ம் நாளின் இரவாகிய சுவிசேஷ யுகத்தில் ஒருவன் தன் வாழ்க் கையின் முடிவு பரியந்தம் பரீட்சார்த்த ரீதியான அல்லது உயிரூட்டப்பட்ட நியாயமாகுதலில் தன்னைக் காத்துக் கொண்டு, ஆதாமினால் வந்த தண்டனையிலிருந்தும் சீர்கேட்டிலிருந்தும் தன்னைச் சுத்திகரித்துக் கொள்ளாத வன், உண்மை நிகழ்வான பண்டிகையை② அனுசரிக் கவே முடியாது (*1*கொரி.*5:7,8*), வருடாந்தர ஞாபகார்த் தத்தில்④ பாத்திரமுள்ளவனாகப் பங்கு கொள்ளவும் முடியாது. இவ்வாறாக அவன் தன்னுடைய பாவத்தையும் தண்டனையையும் நீக்குகிற தன்னுடைய ஆட்டுக்குட்டி யாகக் (யோவா. *1:29,36*) கிறிஸ்துவை விசுவாசத்தினால் பற்றிக் கொள்ள முடியாது. அதாவது 'குறித்த காலத்தில் கர்த்தருக்குக் காணிக்கையைச் செலுத்த முடியாது."

*18.* இந்த தீட்டும் அதினால் வருகிற தண்டனை யும் ஏழு நாட்களுக்கு நீடிப்பது பின்வரும் காரியத்தை அடையாளப்படுத்தும்: ஆதாமினால் வந்த தீட்டிலிருந்தும் தண்டனையிலிருந்தும் விடுவிக்கப்படுவதற்கு, ஒருவன் நிஜ நிறைவேறுதலான ஏழாம் நாளாகிய மில்லினிய யுகத் தின் சுத்திகரிப்பை, உண்மை நிகழ்வாக அல்லது கருதப் பட்ட நிலையில் பெற்றுக் கொள்ள வேண்டும். அடை யாளத்தில் (எண். *19:12*) - *(1)* மூன்றாம் நாளில் நிகழுகிற சுத்திகரிப்பானது பரீட்சார்த்த ரீதியில் நியாயமாகுதலை அடையாளப்படுத்துகிறது. ஏனென்றால் பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதல் என்பது ஆபிரகாமின் உடன் படிக்கையோடு தொடங்கினது. அந்த உடன்படிக்கை யானது, மனுகுலம் பாவத்தில் அல்லது மரணத்தில் விழுந்ததிலிருந்து மூன்றாம் ஆயிர வருட நாளில் செயல் படத் தொடங்கினது. *(2)* ஏழாம் நாளில் நிகழுகிற சுத்தி கரிப்பானது, கருதப்பட்ட அல்லது உண்மை நிகழ்வான மில்லினிய யுகத்தில் கிரியை செய்கிற கருதப்பட்ட அல்லது உண்மை நிகழ்வான நியாயமாகுதலை அடையாளப்படுத்துகிறது.

*19.* இவ்வாறாக இந்த தீட்டுப்பட்ட நபர்கள் தெரிந்து கொள்ளப்படாத உலகத்தாரை அடையாளப் படுத்துகிறார்கள். உலகத்தார் இந்த வாழ்க்கையில் உண்மை நிகழ்வாக நிஜ நிறைவேறுதலான பஸ்காவை② அனுசரிப்பதில்லை. ஆகையால் அவர்கள் ஆதாமின் தண்டனையின்கீழ் மரிக்கிறார்கள். அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் முன்பாக வருவதென்பது (எண். *9:6*) தேவனுடைய செயலதிகாரியும் (மோசே), தேவனுடைய பிரதான ஆசாரியருமாகிய (ஆரோன்) கர்த்தராகிய யெஷுஆவின் கவனத்திற்கு உலகத்தார் வருவதை அடையாளப்படுத்துகிறது. அவர்கள் மோசேயிடம் வந்தபோது, அவர் அந்த கேள்விக்குப் பதிலை அறியா திருந்தார் (எண் *9:8*). இது பின்வரும் காரியத்தை அடையாளப்படுத்துகிறது: தண்டனைக்குட்பட்டு சீர் கேடடைந்த மனுகுலத்தைக் குறித்து நம்முடைய கர்த்த ரின் மனதில் சிந்தனை தோன்றின போது, அதற்கு அவர் பதில் அறியாதிருந்தார். ஆனால் இது அவருடைய ஞான ஸ்நானத்திற்குப் பிறகுதான் நிகழ்ந்திருக்க வேண்டும். ஏனென்றால் அவர் ஞானஸ்நானம் செய்த போது தான், முதல் முறையாகத் (பரீட்சார்த்த ரீதியில்) தேவனுடைய செயலதிகாரியாகவும் பிரதான ஆசாரியராகவும் ஆனார். இது எப்பொழுது நடந்திருக்கக் கூடும்? நாங்கள் இவ்வாறு பதிலளிக்கிறோம்: அவர் ஞானஸ்நானத்தை எடுத்த பிறகும், அவருடைய ஊழியத்தைத் தொடங்கு வதற்கு முன்பும் நிகழ்ந்திருக்க வேண்டும். அதாவது அவர் வனாந்தரத்தில் கழித்த *40* நாட்களில் அதின் பெரும் பகுதி நிகழ்ந்திருக்க வேண்டும். அந்த நிகழ்வு சம்பந்தப்பட்ட உண்மைகளை ஆராயும்போது இது தெளிவாகிறது. ஏனென்றால் தண்டனைக்குட்பட்ட மனுகுலம் மில்லினிய யுகத்தில் நிஜ நிறைவேறுதலான பஸ்காவை② அனுசரிப் பதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொள்ளும் என்று யெஷுஆ வனாந்தரத்திலிருந்து திரும்ப வரும்போது அறிந்திருந்தார். அவர் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முன்பு தேவனுடைய (பரீட்சார்த்த ரீதி யான) செயலதிகாரியாகவும் (நிஜ நிறைவேறுதலான மோசே) பிரதான ஆசாரியராகவும் (நிஜ நிறைவேறுதலான ஆரோன்) இல்லாதிருந்ததால், அவருடைய ஞானஸ்நானத் திற்குப் பிறகும் வனாந்தரத்திலிருந்து திரும்ப வருவதற்கு முன்பும் அவர் அந்த பதிலைப் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

*20.* இது எவ்வாறு நடந்ததென்று நாம் கவனிப் போம்: யெஷுஆவின் ஊழியத்திற்காக அவரைத் தகுதிப் படுத்தும் அறிவை அவர் அவருடைய ஞானஸ்நானத் திற்குப் பிறகு பெற்றுக்கொள்ளத் தொடங்கினார். ஏனென்றால் அப்போது முதல் முறையாக "வானம் (உயர் வான, ஆவிக்குரிய காரியங்கள்) அவருக்குத் திறக்கப் பட்டது, அதாவது ஆவிக்குரிய காரியங்கள் அவருக்குத் தெளிவாக்கப்பட்டன (மத். *3:16*). ஆவிக்குரிய காரியங் களில் அவர் கண்ட முதல் காரியம், அவருடைய ஜெனிப் பித்தலாக இருந்தது. ஏனென்றால் மத். *3:16*-ம் வசனத் தின்படி, ஆவிக்குரிய காரியங்கள் திறக்கப்படுவதுடன், அவர் தேவ ஆவி இறங்கி தம்மேல் வந்து தங்குவதை அவர் கண்டார். அவர் வனாந்தரத்திலிருந்து திரும்ப வந்த பிறகு, மற்றவர்களுக்குத் தேவனுடைய திட்டத்தை விளக்குவதற்குத் தேவையான பொதுவான விவரங் களைப் பற்றிய ஆழமான அறிவுடையவராக இருந்ததால், அவர் ஞானஸ்நானம் எடுத்ததிலிருந்து வனாந்தரத் திலிருந்து திரும்ப வருவதற்கிடையில், அந்த அறிவை பெற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

*21.* தேவனுடைய திட்டத்தின் பொதுவான அம்சங்கள் ஒரு கிரமமான வரிசையில் அவருக்குத் திறக்கப்பட்டிருந்தன என்பதில் சந்தேகமில்லை. அவர் தம்மைச் சம்பந்தப்பட்ட தேவ சித்தத்தை முதலில் கற்றுக் கொண்டார். தேவ வார்த்தை சம்பந்தமாக அவருக்கு இருந்த அனுபவங்கள் முதலியவைகளைக் குறித்து சங். *119*-ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். அதற்கு இணக்க மாக, அவருக்குள்ளிருந்த பரிசுத்த ஆவியானது, வேத வசனங்களைத் தியானித்து, பின்வரும் கருத்தை அவருக்கு தெளிவுப்படுத்தினது. அவர் மனுகுலத்தைச் சாபத்திலிருந்து விடுவிப்பவராக இருக்க விரும்பினால், உலகத்தின் பாவத்திற்காகத் தேவ நீதியைத் திருப்தி செய்வதற்கு, நிஜ நிறைவேறுதலான ஆட்டுக்குட்டியாக வும் நிஜ நிறைவேறுதலான காளையாகவும் இருக்கிற அவருடைய மனுஷீகத்தைப், புது சிருஷ்டியாகிய கிறிஸ்து பலி செய்ய வேண்டும்.

*22.* தேவனுடைய திட்டத்தில் தம்முடைய இடத்தைப் பற்றிய விரிவான மற்றும் தெளிவான புரிந்து

கொள்ளுதலை அவர் பெற்றுக் கொண்ட பிறகு, அந்தத் திட்டத்தின் இரண்டாம் பெரிய அம்சம் சம்பந்தமாகக் கர்த்தருடைய ஆவி அவருடைய புரிந்து கொள்ளுதலின் கண்களைத் திறந்தது என்பதில் சந்தேகமில்லை. அந்த அம்சமென்னவென்றால் சபை வகுப்பார் அவரோடு பாடு படுகிறவர்களாகவும் அவரோடு ஆளுகை செய்பவர் களாகவும் இருப்பார்கள் என்பதாகும். இவ்வாறாகத் தேவ வார்த்தை என்னும் கண்ணாடியில் அவர் தம் முடைய பிரதிபலிப்பைப் பார்த்ததைப் போல், "அவ ரோடிருக்கும் சபையானது" அதே தேவ வார்த்தையில் பல யுகங்களாகவும் தலைமுறைகளாகவும் மறைக்கப்பட்ட ரகசியமாகச் சித்தரிக்கப்பட்டிருப்பதை அவர் கண்டார். கால வரிசையிலும், உயர்விலும் பரிசுத்தவான்களில் முதன்மையானவராகிய அவருக்கு இந்த காரியம் அப் போது வெளிப்படுத்தப்பட்டது.

*23.* அதற்குப்பிறகு அவர் ஆதாமின் சந்ததியில் மீதியானவர்களை மனரீதியாகக் கண்டு; தேவ வார்த் தையை ஆராயும் போது, "இவர்களுக்காகத் தேவனுடைய திட்டத்தில் என்ன இருக்கிறது"? என்ற கேள்வி அவரு டைய மனதில் தோன்றினது. மில்லினிய யுகத்தில் இழந்ததைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கான நம்பிக்கையே, யாவே தேவன் பொது மனுகுலத்திற்காக ஏற்பாடு செய்த பங்காகும் என்று காண்பிக்கிற வேத வசனங்களைப் பரிசுத்த ஆவி அவருக்குத் தெளிவுப் படுத்தினது. இவ்வாறாகத் தேவனுடைய திட்டத்தின் மூன்று பெரிய அம்சங்களாகிய கிறிஸ்து, சபை மற்றும் உலகம் என்பவைகள் அவருக்கு அப்போது தெளிவாக்கப் பட்டிருந்தன. இந்த விளக்கத்தை மனதில் கொண்டு நாம் எண். *9:6-11* வரையுள்ள வசனங்களை ஆராய்வோம். தீட்டுப்பட்டு தண்டனைக்குட்பட்ட மனுகுலத்தை யெஷுஆ தமது மனக்கண்களில் காண்பதென்பது தீட்டுப் பட்ட மனுஷர் மோசேக்கும் ஆரோனுக்கும் முன்பாக நிற்பதை அவர்கள் காண்பதின் நிஜ நிறைவேறுதலாக இருக்கிறது.

*24.* தீட்டுப்பட்ட இந்த மனுஷன் சம்பந்தப்பட்ட இந்த பரிவர்த்தனை தான், முதலாம் வருடாந்தர பஸ்கா③ கர்த்தருடைய இராப்போஜனத்தை④ மட்டுமே அடை-யாளப்படுத்தவில்லை என்ற கருத்தை நமக்குக் கொடுக் கிறது. கர்த்தர் முதலாம் வருடாந்தர பஸ்காவை③ உண்மை நிகழ்வான② மற்றும் உருவகமான④ நிஜ நிறை வேறுதலான பஸ்காவை அடையாளப்படுத்த உபயோகித் தார். அதைத் தொடர்ந்து வரும் காரியங்கள் நமக்கு இதைக் காண்பிக்கின்றன. அந்த மனுஷர் தீட்டுப் பட்டிருப்பதால், நிசான் *14*-ம் தேதி அன்று பஸ்காவில் பங்கு கொள்ளாத படி தடுக்கப்பட்டதைப் போல், நிஜ நிறைவேறுதலான நிசான் *14*-ம் தேதியாகிய சுவிசேஷ யுகத்தில் பிரதிஷ்டை செய்யாதவர்கள், உண்மை நிகழ் வான நிஜ நிறைவேறுதலான ஆட்டுக்குட்டியில் பங்கு கொள்ள முடியாது.

*25.* அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் முன் பாக வருவதென்பது பின்வரும் காரியத்தை அடையாளப் படுத்துகிறது. நம்முடைய கர்த்தர் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட பிறகு, யாவே தேவனுடைய பரீட் சார்த்த ரீதியான செயலதிகாரியாகவும் பிரதான ஆசாரிய ராகவும், உலகத்தாரைப் பொருத்தவரை தம்மைக் குறித்த தேவனுடைய சித்தம் என்னவென்று அறிந்து கொள்வ தற்காகத், தேவனுடைய திட்டத்தின் பல்வேறு அம்சங் களை அவர் ஆராய்ந்து கொண்டிருக்கையில், தண்டனைக் குட்பட்ட மனுகுலம் அவருடைய கவனத்திற்கு வந்தது. தண்டனைக்குட்பட்ட உலகத்தார் உண்மை நிகழ்வாகச், சரீர ரீதியாக வனாந்தரத்தில் கர்த்தருக்கு முன்பாக வந்தார்கள் என்று நாம் புரிந்து கொள்ளக்கூடாது. மாறாக நிஜ நிறைவேறுதலில் அவர்கள் அவருக்கு முன்பாக வருவதென்பது, மன ரீதியான ஒன்றாக இருந்தது. அது நம்முடைய கர்த்தரின் மனதில் நடந்த ஒரு செயலாக இருந்தது. அதில் அவர் மன ரீதியாக அவர்களைப் பார்த்தார். இவ்வாறாக அவர்கள் மனரீதியாக அவருக்கு முன்பாக வந்தார்கள். மேலும் உலகத்தார் நம்முடைய கர்த்தரோடு உண்மை நிகழ்வாகப் பேசினார்கள் என்றும் நாம் இதைப் புரிந்து கொள்ளக் கூடாது. மாறாக மரண பரியந்தமும் ஆதாமினால் தீட்டுப்பட்டவர்களாகவும் தண்டனைக்குட்பட்டவர்களாகவும் இருக்கிற உலகத் தாரின் நிலை, நம்முடைய கர்த்தரிடம் உருவகமாகப் பேசினதென்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது மரணப்பரியந்தமும் தீட்டுப்பட்டு தண்டனைக் குட்பட்டவர்களாகிய அவர்களுடைய நிலையை அவருக்கு முன்பாக வெளிப்படுத்தினார்கள் ("நாங்கள் மனித பிரேதத்தினால் தீட்டுப்பட்டவர்கள்").

*26.* தீட்டுப்பட்டு தண்டனைக்குட்பட்ட உலகத் தாரின் நிலையானது, அவர்கள் சுவிசேஷ யுகத்தின் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் இரட்சிப்பில் பங்கு கொள்ள முடியாது என்ற கருத்தை நம்முடைய கர்த்த ருக்குத் தெரிவித்தது. அதாவது எகிப்தில் நிசான் *14*-ம் தேதி அன்றும், சீனாயில் நிசான் *14*-ம் தேதி அன்றும் அனுசரிக்கப்பட்ட பண்டிகையின் நிஜ நிறைவேறுதலை, அவர்கள் அனுசரிக்க முடியாது என்ற கருத்தை அவருக்குத் தெரிவித்தது. அந்த நிலை அவருடைய மனதில் பின்வரும் கேள்வியை எழுப்பினது: "குறித்த காலத்தில் (சுவிசேஷ யுகத்தில்) இஸ்ரயேல் புத்திரரோடே கூட (ஆவிக்குரிய இஸ்ரயேல்) கர்த்தருக்கு காணிக்கை யைச் செலுத்தாதபடிக்கு (எங்களுக்குப் பதிலாக எங்க ளுக்காகப் பலி செய்யப்பட்டவரும், எங்களுக்குப் பதி லாக யாவே தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வருமாகிய கிறிஸ்துவை விசுவாசத்தினால் பற்றிக் கொள் ளாத படிக்கு) நாங்கள் விலக்கப்பட்டிருக்க வேண்டியது என்ன?" வேறு வார்த்தைகளில் சொன்னால், அடையாளத் தில் மோசேயிடம் கேள்வி கேட்ட தீட்டுப்பட்ட மனுஷர், தெரிந்து கொள்ளப்படாத உலகத்தார், நிஜ நிறைவேறு தலான பஸ்காவை அனுசரிப்பதற்கான சந்தர்ப்பத்தைச் சுவிசேஷ யுகத்தில் ஏன் பெற்றுக் கொள்ளவில்லை என்ற கேள்வியைத், தீட்டுப்பட்டு தண்டனைக்குட்பட்ட மனு குலத்தின் நிலையானது, நம்முடைய கர்த்தரின் மனதில் எழுப்புவதை அடையாளப்படுத்துகிறது. அதாவது தெரிந்து கொள்ளப்படாத உலகத்தார், சுவிசேஷ யுகத்தில் செயல்பட்ட பரம அழைப்புக்கான இரட்சிப்பை அடை யும் சந்தர்ப்பத்தை, ஏன் பெற்றுக் கொள்ளவில்லை என்ற கேள்வியை நம்முடைய கர்த்தரின் மனதில் எழுப்பினது.

*27.* நம்முடைய கர்த்தரின் மனதில் இந்த கேள்வி முதலில் எழும்பினபோது, அவர் அதற்குரிய பதிலை அறியாதவராயிருந்தார். அடையாளமான கேள்விக்கு மோசே பதில் அறியாதிருப்பது என்பது இதை அடை யாளப்படுத்துகிறது. மோசே அந்த மனுஷரிடம் "பொறுங் கள்" என்று சொல்வது, அதாவது பதிலுக்காகக் காத்திருங்கள் என்று சொல்வது, யெஷுஆ பதிலுக்காகத் தமது மனதில் உலகத்தாரை உருவகமாகக் காத்திருக்கச் சொல்வதை அடையாளப்படுத்துகிறது. அந்த மனுஷரின் கேள்விக்குக் கர்த்தர் கொடுக்கிற பதிலைக் கேட்பதற்கு மோசே கர்த்தரை நோக்குவதென்பது பின்வரும் காரியத்தை அர்த்தப்படுத்துகிறது: உலகத்தார் நிஜநிறை

வேறுதலான பஸ்காவில்② பங்கு கொள்ளும் சந்தர்ப்பம் இருக்குமா என்பது சம்பந்தமாகத் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்வதற்காக, தேவன் தமது வார்த்தையின் மூலம் யெஷுஆவிடம் பேசுவதற்காக, அவர் தேவனை நோக்கி பார்ப்பதை அடையாளப் படுத்துகிறது.

## நம்முடைய கர்த்தராகிய யெஷுஆவின் கேள்விக்குத் தேவன் அளித்த பதில்

*28. எண். 9:9-12 கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரயேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்ன வென்றால்: உங்களிலாகிலும் உங்கள் சந்ததியாரிலாகிலும் ஒருவன் பிரேதத்தினால் தீட்டுப்பட்டாலும், பிரயாணமாய்த் தூரம்போயிருந்தாலும், கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்கவேண்டும். அவர்கள் அதை இரண்டாம் மாதம் பதினாலாந்தேதி அந்திநேரமான வேளையில் ஆசரித்து, அதைப் புளிப்பில்லாத அப்பங்களோடும் கசப்பான கீரைகளோடும் புசித்து, விடியற்காலம்மட்டும் அதில் ஒன்றும் மீதியாக வைக்காமலும், அதில் ஒரு எலும்பையும் முறிக்காமலும், பஸ்காவினுடைய சகல முறைமைகளின்படியும் அதை ஆசரிக்கக்கடவர்கள்*

29. யாவே தேவன் மோசேக்குப் பதில் கொடுப்பதென்பது, தேவன் பழைய ஏற்பாட்டின் மூலம் நம்முடைய கர்த்தருக்கு ஒரு பதிலைக் கொடுப்பதை அடையாளப்படுத்துகிறது. நம்முடைய கர்த்தரின் வனாந்தர அனுபவங்களின் 40 நாட்களில் அவருக்கு இந்த பதில் கொடுக்கப்பட்டது. தீட்டுப்பட்டவனும் பிரயாணமாய் தூரம் போய் இருந்தவனும் பஸ்காவை ஆசரிக்க வேண்டுமென்று அடையாளத்தில் கொடுக்கப்பட்ட பதிலானது, தண்டனைக்குட்பட்டு, தீட்டுப்பட்டு, தப்பறைக்குள் சென்ற மனுகுலம் நிஜ நிறைவேறுதலான பஸ்காவை ② அனுசரிப்பதற்கான ஓர் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொள்வார்கள், அதாவது கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் இரட்சிப்படைவதற்கான ஓர் சந்தர்ப்பத்தை பெற்றுக் கொள்வார்கள் என்று தேவன் கொடுத்த பதிலை அடையாளப்படுத்துகிறது. இதை இஸ்ரயேல் புத்திரருக்குச் சொல்ல வேண்டுமென்று தேவன் மோசேக்குக் கொடுத்த கட்டளையானது, மாம்ச இஸ்ரயேலர்களுக்கும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கும் உலகத்தாரின் இரட்சிப்பைக் குறித்துப் போதிக்க வேண்டுமென்று தேவன் யெஷுஆவுக்கு வனாந்தரத்தில் கொடுத்த கட்டளையை அடையாளப்படுத்துகிறது.

## பிரயாணமாய் தூரம் போயிருந்தவர்கள்

30. தீட்டுப்பட்டவனைப் பற்றிய கேள்வி மட்டுமே எழுப்பப்பட்டிருந்தாலும், அவர்களைக் குறித்தும் இஸ்ரயேலர்களிடமிருந்து பிரயாணமாய் தூரம் போயிருந்தவர்களைக் குறித்தும் தேவன் பதிலளித்தார் என்பதைக் கவனிப்போம். இந்த இருவருக்கிடையிலுள்ள வித்தியாசமென்ன? நாங்கள் அதை இவ்வாறு புரிந்து கொள்கிறோம்: (1) பிரேதத்தினால் தீட்டுப்பட்ட மனுஷன் ஆதாமினால் தீட்டுப்பட்டு தண்டனைக்குட்பட்டவர்களைப் பொதுவாக அடையாளப்படுத்துகிறான், (2) பிரயாணமாய் தூரம் போனவர்கள் என்பது, தப்பறைக்குள் வழி விலகி போனவர்களை அடையாளப்படுத்துகிறது. பொதுவாகச் சொன்னால், தீட்டுப்பட்டவர்கள் என்பது பெயரளவிலான யூதர்களையும் பெயரளவிலான கிறிஸ்தவர்களையும் குறிக்கிறது. பொதுவாகச் சொன்னால், பிரயாணமாய் தூரம் போனவர்கள் என்பது மெய் தேவன் நம்பிக்கையற்றவர்களைக் (heathen) குறிக்கிறது. இந்த இருவகுப்பார்களும் தெரிந்து கொள்ளப்படுதலின் இரட்சிப்பிற்கான சந்தர்ப்பத்திலிருந்து விலக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் இரட்சிப்படைவதற்கான ஓர் சந்தர்ப்பத்தை, அதாவது பஸ்கா② அனுசரிப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை இருவகுப்பார்களுக்காகவும் தேவன் வைத்திருக்கிறார். "உங்களிலாகிலும் உங்கள் சந்ததியாராகிலும்" என்ற சொற்றொடரானது, அந்த அடையாளம் மாம்சத்திற்குரிய இஸ்ரயேலர்கள் அனைவருக்கும் பொருந்துவதைப் போல், அதின் நிஜ நிறைவேறுதலும் நிஜ நிறைவேறுதலான இஸ்ரயேலர்கள் அனைவருக்கும் பொருந்தும் என்பதை அடையாளப்படுத்துகிறது.

## கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் மில்லினிய யுகத்தில் இரட்சிப்படைதல்

31. ஆனால் தீட்டுப்பட்டவர்கள் பஸ்காவை அனுசரித்த நேரமானது பொது இஸ்ரயேலர்கள் அதை அனுசரித்த நேரத்திலிருந்து வேறுபட்டிருந்தது. பொது இஸ்ரயேலர்கள் அதை முதலாம் மாதம் 14-ம் தேதி அன்று இரவில் அதை அனுசரித்த போது, தீட்டுப்பட்டவர்கள் இரண்டாம் மாதம் 14-ம் தேதி அன்று இரவில் அதை அனுசரித்தார்கள். நிசான் 14-ம் தேதி இரவு சுவிசேஷ யுகத்தை அடையாளப்படுத்துகிறது என்று நாம் பார்த்தோம். சுவிசேஷ யுகத்தில் நிஜ நிறைவேறுதலான சுத்தமான இஸ்ரயேலர்கள் உண்மை நிகழ்வான நிஜ நிறைவேறுதலான பஸ்காவை② அனுசரித்தார்கள். ஆனால் நிஜ நிறைவேறுதலாகத் தீட்டுப்பட்டவர்கள் அதை அப்போது அனுசரிக்கக் கூடாததாயிருந்தது. உலகத்தார் மில்லினிய யுகத்தில் அவர்களுக்கு உரிய இரட்சிப்புக்கான சந்தர்ப்பத்தைப் (அவர்களுக்குரிய பஸ்காவை) பெற்றுக் கொள்வார்கள் என்று நாம் அறிவோம். ஆகையால் அடையாளத்தில் தீட்டுப்பட்டவர்கள் பஸ்காவை அனுசரிக்கும் தேதியாகிய இரண்டாம் மாதம் 14-ம் தேதியானது மில்லினிய யுகத்தை அடையாளப்படுத்துகிறது. மேலும் அவர்கள் இரண்டாம் மாதம் 14-ம் தேதி அன்று பஸ்காவை அனுசரிப்பதென்பது மில்லினிய யுகத்தில் உலகத்தார் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் மூலம் இழந்ததைத் திரும்பக் கொடுத்தலின் சிலாக்கியங்களில் பங்கு கொள்வதை அடையாளப்படுத்தும்.

32. இவ்வாறாக இஸ்ரயேலர்கள் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்ட இரண்டாம் வருடத்தில் நிகழ்ந்த இரு பஸ்கா அனுசரிப்புகள்③, சுவிசேஷ யுகத்தில் சபை வகுப்பாரும், மில்லினிய யுகத்தில் உலகத்தாரும் அவர்களுக்குரிய இரட்சிப்பை அடைவதை② அடையாளப் படுத்தும். ஆகையால் நாம் ஆராய்கிற இந்த அடையாளத்தில் அடங்கியுள்ள ஒரு கருத்து இரு இரட்சிப்புகள் என்பதாகும். மற்றொன்று, அந்த இரு இரட்சிப்புகள் வெவ்வேறு காலங்களில் செயல்படும் என்பதாகும். மூன்றாவது, சபை வகுப்பாரின் விடுதலையும், உலகத்தாரின் விடுதலையும், அவர்கள் கிறிஸ்துவின் நீதியை, அல்லது வேறு வார்த்தைகளில் சொன்னால் கிறிஸ்துவின் பூரண மனுஷீகம், அவருடைய ஜீவ உரிமை, அவருடைய ஜீவாதார உரிமைகள் ஆகியவற்றைத் தங்களுக்குரியதாக ஆக்கிக்கொள்வதின் மூலம் (சபை இதை விசுவாசத்தினால் செய்தது, உலகத்தார் இதை விசுவாசத்தினாலும்

கிரியைகளினாலும் செய்வார்கள்) நிஜநிறைவேறுதலான பஸ்காவாகிய கிறிஸ்துவிடமிருந்து வருகிற ஜீவனைத் தங்களுக்குரியதாக ஆக்கிக்கொள்வதைச் சார்ந்திருக் கிறது என்பதாகும்.

## ஒவ்வொருவனும் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தின் ஆரம்பத்திலிருந்தே அதின் நன்மைகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

*33.* தீட்டுப்பட்ட வகுப்பார் இரு சாயங்காலங் களுக்கிடையில் *(between the two evenings – KJV பக்க குறிப்பு –மாலை 6 மணிக்கு எபிரெய நாள் தொடங் கும்போது)* ஆட்டுக்குட்டியைப் பலி செய்வது என்பது, ஒவ்வொருவனுக்கும் மில்லினிய யுகம் தொடங்கின உடனே (இது வெவ்வேறு நபர்களுக்கு வெவ்வேறாகத் தொடங்கும், ஒருவனுக்குரிய மில்லினிய யுக சிலாக் கியங்கள் செயல்படத் தொடங்கும் போது அவனுக்கு மில்லினிய யுகம் தொடங்கும்). தனக்குரிய நன்மைகளைப் பயன்படுத்திக் கொண்டு, அவனுக்குக் கிடைத்த சந்தர்ப் பத்தின் ஆரம்பத்திலிருந்தே ஆட்டுக்குட்டியானவரை விசுவாசத்தினாலும் கீழ்ப்படிதலினாலும் பற்றிக் கொள்ள வேண்டும். அக்காலத்தில் எபிப்பெனி பாளயத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு, மில்லினிய யுக இழந்ததைத் திரும்பக் கொடுத்தலின் சந்தர்ப்பங்கள் தொடங்கினவுடனே இது தொடங்கும். அவர்களுக்குக் கிடைத்திருக்கும் போதனைகளினால் அவர்கள் மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திர வான்கள் திரும்ப வருவதற்காக ஆர்வத்துடன் விழித்துக் கொண்டிருப்பார்கள். இழந்ததைத் திரும்பக் கொடுத் தலின் இரட்சிப்பு செயல்படத் தொடங்கினது என்பதற்கு இது அவர்களுக்கு ஒரு அறிகுறியாக இருக்கும். அவர்கள் உடனடியாக அந்த சந்தர்ப்பத்தைத் தங்களுக்கென்று பயன்படுத்திக் கொள்வார்கள். அதாவது மில்லினிய யுக பஸ்காவை அனுசரிக்கத் தொடங்குவார்கள். இவ்வாறாக அவர்கள் ஒரு சகாப்தத்திலிருந்து மற்றொரு சகாப்தத் திற்குள் செல்லும் போது, அதாவது இரு சாயங் காலங்களுக்கிடையில் மில்லினிய யுக பஸ்காவை அனுசரிக்க தொடங்குவார்கள். மற்றவர்களுக்கோ, அவர் கள் மில்லினிய யுக சூழ்நிலைகளோடு தொடர்புக்குள் வந்தவுடனே அவர்கள் பஸ்கா அனுசரிப்பது தொடங்கும். மனுகுலத்தில் பெரும்பான்மையோரை பொருத்தவரை அவர்கள் மரித்தோரிலிருந்து விழித்தெழும் போது இது நடைபெறும்.

## புளிப்பில்லா அப்பத்தோடும் கசப்பான கீரைகளோடும்

*34.* தீட்டுப்பட்டவர்கள் புளிப்பில்லா அப்பத் தோடு பஸ்காவைப் புசிப்பதென்பது, சுவிசேஷ யுகத்தில் பரிசுத்தவான்கள் செய்ததைப் போலவே, இழந்ததைத் திரும்பப் பெறும் வகுப்பார் தப்பறை, பாவம் என்னும் புளிப்பை தங்களிடமிருந்து அகற்றி, சத்தியத்திலும் அதின் ஆவியிலும் பங்கு கொண்டு, அவைகளோடு பஸ்காவை அனுசரிப்பதை அடையாளப்படுத்தும் *(1கொரி. 5:7,8).*

*35.* ஆனால் அவர்கள் நிஜ நிறைவேறுதலான கசப்பான கீரைகளை புசிப்பது எதை அடையாளப் படுத்தக் கூடும்? சுவிசேஷ யுகத்தில் பிரதிஷ்டை செய்தவர்களை பொருத்தவரை, நீதியின் நிமித்தம் அவர் களுக்கு வந்த பாடுகளும் துன்புறுத்தல்களும், அவர் களுடைய சோதனைகள் மற்றும் குணாம்ச பரீட்சைகள் அவர்களுடைய கசப்பான கீரைகளாக இருந்தன. ஆனால் அடுத்த யுகத்தில் நீதியின் நிமித்தம் வருகிற எவ்வித துன்புறுத்தல்களும், பாடுகளும் இருப்பதில்லை. ஏனென் றால் அக்காலத்தின் சூழ்நிலைகளில் நீதியை அப்பியா சிப்பது எளிதாக இருக்கும் *(சங். 72:7)*. நீதியின் நிமித்தம் ஒருவனும் துன்புறுத்தப்பட அக்காலத்தில் அனுமதிக்கப் படாது *(ஏசா. 25:8)*. ஆகையால் நீதியின் நிமித்தம் துன்புறுத்தல்கள் மற்றும் பாடுகள் என்னும் இருவகை யான கசப்பான கீரைகளை இழந்ததைத் திரும்பப் பெறும் வகுப்பார் பெற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆனால் அவர்களும் நிஜ நிறைவேறுதலான கசப்பான கீரைகளில் பங்குக்கொள்ள வேண்டியதாயிருக்கும் என்று இந்த அடையாளம் காண்பிக்கிறது. அந்தக் கசப்பான கீரைகள் எவை?

*36.* இழந்ததைத் திரும்பப் பெறும் வகுப்பார் தங்களுடைய பெலவீனங்களை மேற்கொள்ளும் போதும், அவர்களுடைய குணாம்ச சீர்கேட்டை குணப் படுத்துவதற்காக அவர்களுடைய தீய செயல்கள் நிமித்தம் அவர்கள் சிட்சிக்கப்படும் போதும், அவர்களுக்கு வரும் பாடுகளும், கஷ்டங்களும், அவர்களுடைய கசப்பான கீரைகளாக இருக்கும். ஏனென்றால் அக்காலத்தில் தவறான செயல்களுக்காகச் சிட்சித்து, தீய பழக்கங் களைச் சீர்திருத்துகிற கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடைபெறும் *(ஏசா. 26:9)*. இக்காலத்தில் மற்றவர்களைத் துன்புறுத்தினவர்கள், அக்காலத்தில் அதற்கு ஈடு செய்யவேண்டியதாக இருக்கும். இது அவர்களுக்கு அதிகமாகவோ, குறைவாகவோ கடினமாக இருக்கும். சீர்கேட்டின் ஆழங்களிலிருந்து வெளியேறி கடும் முயற்சியோடு தன்னுடைய முழு பெலத்தையும் பயன்படுத்திக் கொண்டு பூரணத்துவத்தின் உயரங்களுக்கு ஏறுவது அதிகமாகவோ குறைவாகவோ கடினமாயிருக் கும். ஆனால் அக்காலத்தில் வரும் இந்த சிட்சைகளையும், கஷ்டங்களையும் சகித்துப் பூரணத்துவத்திற்கு ஏறுபவர் கள், அதன் மூலம் மில்லினிய யுக கசப்பான கீரைகளைப் புசிப்பார்கள். ஆகையால் மில்லினிய யுக கசப்பான கீரைகள் என்பது தவறுக்காக அளிக்கப்படும் சிட்சை களையும், அவர்களுடைய சீர்திருத்தலுக்காகவும், அவர் களுடைய குணாம்சத்தைப் பரீட்சிப்பதற்காகவும் வரும் சோதனைகளையும் அர்த்தப்படுத்தும். ஆனால் அவர் களுடைய பஸ்காவாகிய அவர்களுடைய ஆட்டுக்குட்டி யில் அவர்கள் பங்கு கொள்ள விரும்பினால், சத்தியம் மற்றும் அதின் ஆவி என்னும் புளிப்பில்லா அப்பத்தோடு இந்த கசப்பான கீரைகளும் புசிக்கப்பட வேண்டும், அதாவது அவர்களுக்குரியதாக ஆக்கிக்கொள்ள வேண்டும்.

## விடியற்காலம் மட்டும் ஆட்டுக்குட்டியில் ஒன்றும் மீதியாக வைக்கப்படக் கூடாது

*37.* மில்லினிய யுக ஆட்டுக்குட்டியின் அடை யாளத்தை விவரிக்கும்போது, விடியற்காலம் மட்டும் அதில் ஒன்றும் மீதியாக வைக்கப்படக் கூடாது என்று எண். *9:12*-ம் வசனம் குறிப்பிடுகிறது. அதாவது ஆட்டுக் குட்டி முழுவதும் அந்த இரவிலே புசிக்கப்பட வேண்டும். ஆனால் சுவிசேஷ யுக காரியத்தை அடையாளப்படுத்தும் ஆட்டுக்குட்டியை விவரிக்கும் போது *(யாத்.12:10)*, அதிலே

ஒன்றையும் விடியற்காலம் மட்டும் மீதியாக வைக்கக் கூடாது என்று சொல்லுவதற்குக் கூடுதலாக; ஒருவேளை மீதியாக இருந்தால் அது அக்கினியால் சுட்டெரிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. முதலில் பார்க்கும்போது இந்த இரு கட்டளைகளுக்கிடையில் ஒரு முரண்பாடு இருப்பதைப் போல் தோன்றும். ஆனால் நிஜ நிறைவேறுதல்களைக் கவனமாக ஆராயும் போது இந்த இரு வசனங்களுக்கிடையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்பதை நாம் காண்போம்.

*38.* நாம் இந்த இரு வசனங்களை எவ்வாறு இசைவுப்படுத்தக் கூடும்? நாங்கள் இவ்வாறு பதிலளிக்கிறோம்: யாத். *12:10*-ம் வசனத்தைச் சுவிசேஷ யுகத்திற்கும், எண். *9:12*-ம் வசனத்தை மில்லினிய யுகத்திற்கும் பிரயோகிப்பதின் மூலம் இந்த வசனங்களை இசைவுப்படுத்தக் கூடும். இரு வசனங்களிலும் விடியற் காலம் மட்டும் ஆட்டுக்குட்டியில் ஒன்றும் மீதியாக வைக்கப்படக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டளை பின்வரும் காரியங்களை அர்த்தப் படுத்துகிறது: தேவையான பலி புண்ணியம் முழுவதும் அந்தந்த யுகம் முடிவடைந்து, அடுத்த யுகம் தொடங்கு வதற்கு முன்பே தங்களுக்குரியதாக ஆக்கிக்கொள்ளப்பட வேண்டும். அதாவது சுவிசேஷ யுகத்தில் ஒருவனைப் பூரண நிலைக்குக்கொண்டு வருவதற்கு அவனுடைய குறைபாடுகளை நிறைவாக்குவதற்குத் தேவையான கிறிஸ்துவின் பலி புண்ணியத்தை, அவன் அந்த யுகத் திலே முழுமையாக விசுவாசத்தினால் தனக்குரியதாக ஆக்கிக்கொள்ள வேண்டும். அவனுக்குத் தேவையான இந்த பலி புண்ணியத்தில் எந்த பகுதியும் பயன் படுத்தப்படாமல் விட்டுவிடக் கூடாது. ஏனென்றால் ஒருவன் அவனுக்குத் தேவையான பலி புண்ணியத்தின் சிறு பகுதியையும் கூட மில்லினிய யுகம் வரை விட்டு வைத்தால் அவன் ஜீவனை இழப்பான். ஏனென்றால் அவனுடைய சோதனை காலம் முடியும் போது, பலி புண்ணியத்தினால் மூடப்படாத அபூரணம் அவனில் இருக்கும். ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட ஒருவன் மனந்திரும்பாமல் மரிக்கும்போது இது நிகழும். ஏனென் றால் அவனுடைய காரியத்தில் மில்லினிய யுகம் வரும் போது (சபை வகுப்பாருக்கு இது மில்லினிய யுக விடியற்காலமாகும்) ஆட்டுக்குட்டியானவரின் மாம்சத்தில் அவனுக்குரியதாக எடுத்துக்கொண்டதில் கொஞ்சம் மீதியாக வைத்தவனாக அவன் அந்த யுகத்திலிருப்பதால் அவன் ஜீவனை இழப்பான்.

*39.* மில்லினிய யுகத்தை பொருத்தவரை அதின் கருத்து இவ்வாறாயிருக்கிறது: மில்லினிய யுகம் முடிவடைந்து சொற்ப காலம் தொடங்குவதற்கு முன்பே, ஒவ்வொருவனும் விசுவாசத்தினாலும் கிரியைகளினா லும் கிறிஸ்துவின் பூரண மனுஷீகம், அவருடைய ஜீவ உரிமை அவருடைய ஜீவாதார உரிமைகள் ஆகியவற்றை முழுமையாகத் தனக்குரியதாக ஆக்கிக்கொள்ள வேண்டும். அதில் ஏதேனுமொரு பகுதியைத் தனக்குரிய தாக ஆக்கிக்கொள்ளாமல் விட்டுவிட்டால், அவன் அபூரணமான குணாம்சத்தோடு சொற்ப காலத்தில் பிரவேசிப்பான். ஆகையால் சொற்ப காலத்தில் அவனுக்கு அளிக்கப்படும் இறுதியான பரீட்சையில் விழுந்து போவான். இவ்வாறாகச் சுவிசேஷ யுகத்தில் விசுவாசத்தினால் நியாயமாகுதலும், மில்லினிய யுகத்தில் கிரியைகளினால் நியாயமாகுதலும் நடைபெறும் என்ற வித்தியாசம் இருந்தாலும், இரு யுகங்களின் நிஜ நிறை வேறுதலான விடியற்காலை மட்டும் ஆட்டுக்குட்டியில் ஒன்றும் மீதியாக வைக்கப்படக் கூடாது என்பதில் ஒரு ஒப்புமையும் இருக்கிறது. சுவிசேஷ யுகத்தின் விடியற் காலை மில்லினிய யுகமாகவும், மில்லினிய யுகத்தின் விடியற்காலை சொற்ப காலமாகவும் இருக்கிறது.

*40.* இருந்தாலும் இந்த இரு வசனங்களுக் கிடையில் ஒரு வித்தியாசமும் இருக்கிறது. ஆட்டுக் குட்டியில் புசிக்காமல் மீதியாக இருப்பதை அக்கினியால் சுட்டெரிப்பதைக் குறித்து எண். *9:12*-ம் வசனத்தில் எது வும் சொல்லப்படவில்லை. ஆனால் ஆட்டுக்குட்டியில் புசிக்காமல் மீதியாக இருப்பதை அக்கினியில் சுட் டெரிக்க வேண்டுமென்று யாத். *12:10*-ம் வசனம் கட்டளையிடுகிறது. இந்த வித்தியாசம் முரண்பாடான ஒன்றல்ல. மாறாக இரு யுகங்களின் முடிவுகளும் வெவ் வேறான சகாப்தங்களுக்குரியவைகளாக இருப்பதால் இந்த வித்தியாசம் இருக்கிறது. சுவிசேஷ யுகத்தில் எந்த ஒரு நபரின் கணக்கிலும் கிறிஸ்துவின் பலி புண்ணியம் முழுமையாக எழுதப்படுவது அவசியமில்லை என்பதைக் கவனிப்போம். மாறாக ஒவ்வொரு தனிப்பட்ட புது சிருஷ்டியின் மனுஷீகத்திலுள்ள குறைபாடுகளை நிறை வாக்கி அந்த மனுஷீகத்தைப் பூரண நிலைக்குக் கொண்டு வருவதற்குத் தேவையான அளவிற்கு மட்டுமே கிறிஸ்து வின் பலி புண்ணியம் அவனுடைய கணக்கில் எழுதப்படும். ஆகையால் சுவிசேஷ யுகத்தின் முடிவு வரும்போது, கிறிஸ்து தேவனிடத்தில் ஒப்படைத்திருந்த பலி புண்ணியத்தின் ஏதேனும் ஒரு பகுதி எந்த ஒருவனின் கணக்கிலும் எழுதப்படாமலே விட்டு வைக்கப்பட் டிருக்கும். சபை வகுப்பாரின் மேலுள்ள ஆதாமின் தண்டனையைச் சரி செய்வதற்காகக் கிறிஸ்து தம்முடைய பலி புண்ணியம் முழுவதையும் தேவனிடத்தில் ஒப்படைத்திருந்தாலும், சபை வகுப்பாரைக் கருதப்பட்ட நிலையில் நியாயமாக்குவதற்கு அவர்களுடைய குறை பாடுகளை நிறைவாக்குவதற்குத் தேவையாயிருந்த பலி புண்ணியத்தின் பகுதி மட்டுமே அவர்களுடைய கணக்கில் எழுதப்பட்டது. இவ்வாறு கணக்கில் எழுதப் படாமல் விட்டுவிடப்பட்ட கிறிஸ்துவின் பலி புண்ணியத்தின் பகுதிதான் யாத். *12:10*-ம் வசனத்தில் சொல்லப்பட்ட ஆட்டுக்குட்டியின் மீதியுள்ள பகுதி யாகும்.

*41.* அதை அக்கினியால் சுட்டெரிப்பதென்பது எதை அடையாளப்படுத்துகிறது? தேவனிடத்தில் ஒப்படைக்கப்பட்ட கிறிஸ்துவின் பலி புண்ணியத்தின் தேவையான பகுதி மட்டுமே சுவிசேஷ யுக நியாய மாகுதலுக்காகக் கணக்கில் எழுதப்பட்டது என்பதை நினைவில் கொள்வோம். இந்தப் பலி புண்ணியம் சுவி சேஷ யுகம் முழுவதும் கணக்கில் எழுதப்படுவதற்காக மட்டுமே பயன்படுத்தப்படக் கூடியதாக இருந்தது. ஆனால் சுவிசேஷ யுகம் முடிவடைந்த போது, நியாய மாகுதலுக்காகக் கிறிஸ்துவின் பலி புண்ணியம் கணக்கில் எழுதப்படுவது முடிவுக்கு வந்தது. ஆகையால் அவ்வித நியாயமாகுதல் இனி கிரியை செய்யாது. எந்த ஒருவனும் இனி அவ்விதமாக நியாயமாக்கப்பட முடியாது. ஆகை யால் கணக்கில் எழுதப்படுவது என்ற கருத்தில் பலி புண்ணியம் இனி இருக்காது. கிறிஸ்துவின் பலி புண்ணியமே இனி இருக்காது என்பதை இது அர்த்தப் படுத்தாது [ஏனெனில் கணக்கில் எழுதப்படுவதிலிருந்து *(imputation)* தனிப்பட்ட ஒரு செயல் முறையாக, மில்லினிய யுகத்தில் கிரியைகளினால் நியாயமாகுதலைச் செயல்படுத்துவதற்குக் கிறிஸ்துவின் பலி புண்ணியம் உண்மை நிகழ்வாக உபயோகிக்கப்படும் – *(application)*]. ஆனால் கணக்கில் எழுதப்படுவதின் நோக்கங்களுக் காகப் பலிபுண்ணியம் இனி உபயோகிக்கப்படாது. இவ்

வாறாக நிசான் *14*-ம் தேதி விடியற்காலம் மட்டும் விட்டு விடப்பட்டதைச் சுட்டெரிப்பதென்பது, பலி புண்ணியம் இனி கணக்கில் எழுதப்படக் கூடியதாக இருக்காது என்பதை அடையாளப்படுத்தும்.

*42.* ஆனால் மில்லினிய யுக நியாயமாகுதலைச் செயல்படுத்துவதற்கு முழு பலி புண்ணியமும் உண்மை நிகழ்வாக உபயோகிக்கப்படும். ஆகையால் ஒவ்வொரு வனும் பலிபுண்ணியத்தில் தனக்குரிய பங்கை முழுமை யாக உபயோகித்தாலும் உபயோகிக்கவில்லையென்றா லும் கூட, சொற்ப காலம் தொடங்குவதற்கு முன் பலி புண்ணியம் முழுவதும் உபயோகிக்கப்பட்டிருக்கும். ஏனென்றால் மில்லினிய யுகத்தில் (மரண நிலையிலிருந்து எழுப்பப்படும்) ஒவ்வொரு தனி நபருக்காகவும் பலி புண்ணியம் முழுவதும் *(100%)* உண்மை நிகழ்வாக உபயோகிக்கப்பட்டிருக்கும். ஆகையால் மில்லினிய யுகத் திற்குப் பிறகு, பலி புண்ணியத்தைத் தனக்குரியதாக ஆக்கிக்கொள்வதற்கு, அதில் எதுவும் மீதியாக இருக் காது. ஆகையால் பலி புண்ணியம் முழுவதும் சொற்ப காலத்திற்கு முன்பே புசிக்கப்பட வேண்டும். மில்லினிய யுகத்திற்குப் பிறகு பலி புண்ணியத்தை இனி தனக் குரியதாக ஆக்கிக்கொள்ள முடியாது. ஆகையால் சொற்ப காலத்தில் பாவஞ் செய்கிற ஒருவன் இரண்டாம் மரணத் திற்குள் செல்ல வேண்டியதாயிருக்கும். ஏனென்றால் பாவத்தின் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளாத படிக்கு அவனைப் பாதுகாப்பதற்குக் கிறிஸ்துவின் பலி புண்ணியத்தை இனி உபயோகிக்க முடியாது. ஆகையால் அவன் பாவத்தின் சம்பளமாகிய மரணத்தைப் பெற்று கொள்ள வேண்டும்.

## ஆட்டுக்குட்டியில் ஒரு எலும்பையும் முறிக்கக் கூடாது

*43.* ஆட்டுக்குட்டியில் ஒரு எலும்பையும் முறிக்கக் கூடாது என்ற கட்டளையும் முக்கியத்துவம் வாய்ந்ததாயிருக்கிறது. இது சுவிசேஷ யுகத்திற்கும் மில்லினிய யுகத்திற்கும் பொருந்தும் ஒரு புத்திமதியாக இருக்கிறது. ஆட்டுக்குட்டியின் ஒரு எலும்பை முறிப் பதென்பது அதற்கு இம்சை *(violence)* செய்வதாகும். நம்முடைய ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவுக்கு இம்சை விளைவிக்கிறவர்கள் யார்? *(1)* மீட்கும் பலியை மறுதலிப் பவர்களும், *(2)* கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளத் திரும்பினது போல் பாவமென்னும் சேற்றுக்குத் திரும்பு கிற பிரதிஷ்டை செய்த புதுசிருஷ்டிகளும் கிறிஸ்துவுக்கு இம்சை விளைவிக்கிறார்கள். மீட்கும் பலியை மறுக் கிறவர்கள் தேவனுடைய குமாரரைக் காலின் கீழ் மிதிக்கிறவர்களாயிருக்கிறார்கள் (எபி. *10:29*), பாவ மென்னும் சேற்றிலே புரளத் திரும்புகிறவர்கள் தேவ னுடைய குமாரரைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறவர்களாயிருக்கிறார்கள் (எபி. *6:6*). இருவகுப்பார்களும் இரண்டாம் மரணத்திற்குள் செல்வார்கள். சுவிசேஷ யுகத்தில் சிலர் இந்த இரண்டு காரியங்களையும் செய்தார்கள் (எபி. *6:4-7; 10:26-29;* யூதா *4; 1* யோவா. *5:16*). மில்லினிய யுகத்தில் சிலரும் மற்றும் அதின் சொற்ப காலத்தில் சிலரும், இந்த இரு காரியங்களையும் செய்வார்கள். மில்லினிய யுகத்தில் அவ்வாறு செய்பவர்கள் அற்ப ஆயுசுள்ள பாலகரா யிருப்பார்கள், மில்லினிய யுகத்திற்குப் பிறகு அவ்வாறு செய்பவர்கள் தன் நாட்களை (நன்மையினால்) நிரப்பாத கிழவர்களாயிருப்பார்கள் (ஏசா. *65:20*). ஆட்டுக்குட்டியின் ஒரு எலும்பையும் முறிக்கக் கூடாது என்று அடையாளத் தில் சொல்லப்பட்ட புத்திமதியானது, இரு யுகங்களிலும் இந்த இரண்டு தீய காரியங்களைச் செய்யக்கூடாது என்ற எச்சரிக்கைகளை அடையாளப்படுத்துகிறது.

## பஸ்காவை அனுசரிக்காவிட்டால் மரண தண்டனை

*44.* எண். *9:13* ஒருவன் சுத்தமுள்ளவனுமாய்ப் பிரயாணம் போகாதவனுமாயிருந்தும், பஸ்காவை ஆசரிக் காதேபோனால், அந்த ஆத்துமா குறித்த காலத்தில் கர்த்தரின் பலியைச் செலுத்தாதபடியினால் தன் ஜனத் தாரில் இராமல் அறுப்புண்டுபோவான்; அந்த மனிதன் தன் பாவத்தைச் சுமப்பான். சுத்தமுள்ளவனும் பிரயாணம் போகாதவனும் பஸ்காவை அனுசரிக்காவிட்டால் அவனுக்கு அளிக்கப்படும் தண்டனை மரணமாகும் என்று நாம் காண்கிறோம். நிஜ நிறைவேறுதலில் இந்த தண்டனை சுவிசேஷ யுகத்திற்கும் மில்லினிய யுகத் திற்கும் பொருந்தும். சுவிசேஷ யுகத்தில் சுத்தமுள்ள வர்கள் என்பது பிரதிஷ்டை செய்தவர்களை அர்த்தப் படுத்தும். அதாவது எவர்களுடைய கணக்கில் சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவின் பலிபுண்ணியம் எழுதப்படு கிறதோ அவர்களை அர்த்தப்படுத்தும். ஆகையால் முதற்பேறானவர்களின் சபையைச் சேர்ந்தவர்களும் வாலிபரான பாத்திரவான்களும் சுவிசேஷ யுகத்தின் சுத்தமுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்களே சுவி சேஷ யுகத்தில் பிரயாணம் போகாதவர்களாகவும் இருக் கிறார்கள். அவர்கள் சத்தியத்தைப் பெற்றுக்கொண்டவர் களாக இருப்பதால், தப்பறைக்குள் வழிவிலகி செல்ல வில்லை என்ற கருத்தில் பிரயாணம் போகாதவர்களாக இருக்கிறார்கள். இவ்வாறாகச் சுவிசேஷ யுகத்தில் ஜீவனுக்கான பரீட்சையிலோ அல்லது விசுவாசம் மற்றும் நீதிக்கான பரீட்சையிலோ இருக்கிற அனைவரும் சுவி சேஷ யுகத்தில் சுத்தமுள்ளவர்களாகவும் பிரயாணம் போகாதவர்களாகவும் இருக்கிறார்கள்.

*45.* இவர்களில் பஸ்காவை ஆசரிக்காதவர்கள் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? *(1)* அவர்கள் கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற ரத்தத்தில் வைத்த விசுவாசத்தைக் காத்துக் கொள்ள தவறுவதையும், *(2)* அவர்களுடைய பிரதிஷ்டையை நிறைவேற்ற தவறுவதை யும், *(3)* பாவம் மற்றும் தப்பறை என்னும் பழைய புளிப்பை அகற்ற தவறுவதையும், *(4)* உண்மையும் சத்திய மும் என்னும் புளிப்பில்லா அப்பத்தைப் புசிக்க தவறுவதையும், *(5)* அவர்களுக்கு வருகிற சோதனைகள், பாடுகள் மற்றும் துன்புறுத்தல்களைச் சகிக்க தவறு வதையும் அர்த்தப்படுத்தும். ஒரே வார்த்தையில் சொன்னால் அவர்கள் விசுவாச உண்மைத்துவம் இல்லாத வர்களாக நிரூபிக்கப்படுவதை அர்த்தப்படுத்தும். இவர் களுக்கு அளிக்கப்படும் மரண தண்டனையானது, சுவி சேஷ யுகத்தின் நிஜ நிறைவேறுதலான பஸ்காவை அனுசரிக்க தவறுபவர்களின் காரியத்திற்கேற்ப இரண் டாம் மரணம் அல்லது வாலிபரான பாத்திரவானாக இருக்கும் நிலையை இழப்பது என்பதை அர்த்தப் படுத்தும்.

*46.* மில்லினிய யுகத்தின் சுத்தமுள்ளவர்கள் என்பது ஆதாமினால் வந்த மரண தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டு, அந்த தண்டனையின் விளைவுகளி லிருந்து பகுதியாகவோ முழுமையாகவோ வெளியேற்றப் பட்டு பூரணத்துவத்தை நோக்கி தூக்கி நிறுத்தப்படும்

மனுகுலத்தாரைக் குறிக்கும். மில்லினிய யுகத்தில் பிரயாணம் போகாதவர்கள் என்பது சத்தியத்தினால் பிரகாசிப்பிக்கப்பட்டவர்களாக உலகத்தாரைக் குறிக் கிறது. இவர்கள் பஸ்காவை அனுசரிக்க மறுத்தால் இரண்டாம் மரணத்தில் அழிந்து போவார்கள். மில்லினிய யுகத்தில் பிரகாசிப்பிக்கப்பட்டும் நூறு வருட காலத் திற்குச் சந்தர்ப்பத்தைப் பெற்றும் பஸ்காவை அனுசரிக்க மறுப்பவர்கள் அப்போது அறுப்புண்டு போவார்கள். மில் லினிய யுகத்தில் பிரகாசிக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு சொற்ப காலத்தில் பஸ்காவை அனுசரிக்க மறுப்பவர் களும் அறுப்புண்டு போவார்கள்.

*47.* அடையாளத்தில் இதற்கான காரணம் இவ் வாறாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது: "அந்த ஆத்துமா குறித்த காலத்தில் பலியைச் செலுத்தாதபடியினால்" என்று நாம் வாசிக்கிறோம். அதாவது அவன் உண்மை யான விசுவாசத்துடனும், நம்பிக்கையுடனும், அன்பு டனும், கீழ்ப்படிதலுடனும் நிஜநிறைவேறுதலான ஆட்டுக்குட்டியாகிய நம்முடைய கர்த்தரைத் தனக்குப் போதுமான ஈடாகத் தேவனுக்குக் காணிக்கையாகச் செலுத்தாதிருக்கிறான். அதினால் அவன் தேவ நீதி யினிடமிருந்து எவ்விதத்திலும் பாதுகாக்கப்படாதிருக் கிறான். ஆகையால் அந்த மனுஷன் தன் பாவத்தைச் சுமக்க வேண்டும். இது சுவிசேஷ யுகத்திலும் மில்லினிய யுகத்திலும் ஜீவனுக்கான பரீட்சையிலிருந்து விசுவாச உண்மைத்துவம் இல்லாதிருப்பவர்களுக்கு இரண்டாம் மரணத்தை அர்த்தப்படுத்தும். எபிப்பெனி காலத்தில் வாலிபரான பாத்திரவான்களின் ஓட்டத்தில் விசுவாச உண்மைத்துவம் இல்லாதவர்களும் அவர்களுடைய நிலையை இழப்பதை அர்த்தப்படுத்தும்.

## பரதேசியானவன் பஸ்காவை ஆசரித்தல்

*48.* எண். *9:14* ஒரு பரதேசி உங்களிடத்திலே தங்கி, கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்க வேண்டு மானால், அவன் அதைப் பஸ்காவின் கட்டளைப்படியும் அதின் முறைமையின்படியும் ஆசரிக்கக்கடவன்; பரதேசிக்கும் சுதேசிக்கும் ஒரே கட்டளை இருக்க வேண்டும் என்று சொல் என்றார். யாத் *12:43-50* வரை யுள்ள வசனங்கள் சம்பந்தமாக "இஸ்ரயேலர்கள் எகிப்தில் அடிமைப்படுத்தப்படுவது மற்றும் அதிலிருந்து விடுவிக்கப்படுவது" என்ற கட்டுரையிலும் , ரூத் *2-4* அதிகாரங்கள் சம்பந்தமாக "ரூத் - அடையாளம் மற்றும் நிஜ நிறைவேறுதல்" என்ற கட்டுரையிலும் *(PT* கட்டு ரைகள்*)*, "பரதேசி" என்பது வாலிபரான பாத்திரவான் களை அடையாளப்படுத்துகிறது என்று நாங்கள் காண்பித்தோம். அவர்கள் தேசத்தில் குடியிருப்பதென்பது அவர்கள் பிரதிஷ்டை செய்தவர்களாக இருப்பதை, அதாவது சத்தியம் மற்றும் சத்தியத்தின் ஆவியிலிருப் பதை அர்த்தப்படுத்தும். ஆனால் அவர்கள் தேசத்தில் பிறவாதவர்களாக இருப்பதென்பது அவர்கள் ஆவி யினால் ஜெநிப்பிக்கப்படாதவர்களாக இருப்பதை அர்த்தப்படுத்தும். எண் *9:14*-ம் வசனம் வாலிபரான பாத்திரவான்களைக் குறித்துச் சொல்கிறது. வாலிபரான பாத்திரவானாகிய ஒருவர் கர்த்தருக்கு நிஜ நிறைவேறு தலான பஸ்காவை அனுசரிக்க விரும்பினால், ஒரு புதுசிருஷ்டி செய்வதைப் போலவே அவரும் செய்ய வேண்டும். அவர் அதை பஸ்காவின் கட்டளையின் படியும் (கூக்காத்), பஸ்காவின் நியாயம் அல்லது நியமத் தின் படியும் (மிஷ்பாத்) அனுசரிக்க வேண்டும்.

*49.* போதனையின்படி (மிஷ்பாத் - நியாயம், நியமம்) அவர் அதை அனுசரிப்பதென்பது பின்வரும் காரியத்தை அர்த்தப்படுத்தும்: ஆட்டுக்குட்டியானவரின் பலி புண்ணியம் பரீட்சார்த்த ரீதியில் அவருடைய கணக்கில் எழுதப்படுவதின் மூலம், அவரைப் பரீட்சார்த்த ரீதியில் நியாயமாக்குகிறவராக ஆட்டுக்குட்டியானவரில், ஜீவனுள்ள விசுவாசத்தை வைக்கிறார். நடைமுறையின் படி (கூக்காத் - கட்டளை) அவர் அதை அனுசரிப்ப தென்பது பின்வரும் காரியத்தை அர்த்தப்படுத்தும்: *(1)* சுவிசேஷ யுகத்தில் *1881*-ம் வருடத்திற்குப் பிறகு வருகிற காலப்பகுதி நிசான் *14*-ம் நாளின் ஒரு பகுதியாக இருப்பதால் அந்தக் காலத்தில் அதை அனுசரிக்க வேண்டும், *(2)* பாவம் மற்றும் தப்பறை என்னும் புளிப்பை அகற்றி, *(3)* உண்மையும் சத்தியமுமென்னும் புளிப்பில்லா அப்பத்தோடும், *(4)* சோதனைகள், பாடுகள் மற்றும் துன் புறுத்தல் என்னும் கசப்பான கீரையோடும், *(5)* தனக்கு ஆதரவாகத் தேவ வார்த்தை என்னும் தடியைக் கையில் பிடித்துக் கொண்டும், *(6)* ஊழியமென்னும் கச்சையை அறைகளில் கட்டிக் கொண்டும், *(7)* உருவகமான எகிப்தை விட்டு வெளியேறி நிஜ நிறைவேறுதலான கானானுக்குப் பிரயாணம் செய்ய வேண்டும்.

*50.* பரதேசிக்கும் சுதேசிக்கும் ஒரே கட்டளை இருக்க வேண்டுமென்று *14*-ம் வசனத்தில் சொல்லப்படும் போது, நிஜநிறைவேறுதலில் புதுசிருஷ்டிகளின் பிரதிஷ்டையிலும் வாலிபரான பாத்திரவான்களின் பிரதிஷ்டையிலும் கோரப்படுகிற காரியங்களுக்கிடையில் எவ்வித வித்தியாசமுமில்லை என்ற கருத்தை இது நமக்குக் கொடுக்கிறது (இந்த கருத்து பிரதிஷ்டை செய்த எபிப்பெனி பாளயக்காரருக்கும் பொருந்தும்). அவர்கள் எல்லோரும் சுயத்திற்கும் உலகத்திற்கும் மரித்திருக்கவும் தேவனுக்கென்று பிழைத்திருக்கவும் ஒரே விதமான பொருத்தனைகளைச் செய்கிறார்கள். ஆகையால் அவர் கள் தங்கள் மேல் ஏற்றுக் கொள்கிற கடமைகளில் எவ்வித வித்தியாசமுமில்லை. ஆனால் தேவன் அவர் களுடைய பிரதிஷ்டையை எவ்வாறு உபயோகிக்கிறார் என்பதில் மட்டுமே வித்தியாசம் இருக்கிறது. சிலரின் பிரதிஷ்டையை ஆவியினால் ஜெநிப்பித்தலின் மூலம் தேவன் ஏற்றுக் கொள்கிறார் (புதுசிருஷ்டிகள்). மற்றவர் களோ ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லை என்றா லும் அவர்களுடைய பிரதிஷ்டையைத் தேவன் ஏற்றுக் கொள்கிறார். ஆனால் இரு வகுப்பார்களும் அதே நிஜநிறைவேறுதலான பஸ்கா போதனைகளையும் நடைமுறைகளையும் கடைபிடிக்க வேண்டும் - பரதேசிக் கும் சுதேசிக்கும் ஒரே கட்டளை இருக்க வேண்டும். ஆனால் வாலிபரான பாத்திரவான்கள் (பிரதிஷ்டை செய்த எபிப்பெனி பாளயக்காரரும்) எபிப்பெனியில் இந்தக் காரியங்களைச் செய்யும்போது, ஜீவனுக்கான பரீட்சையில் அல்லாமல், விசுவாசம் மற்றும் உண்மைத் துவத்திற்கான பரீட்சையில் இருந்ததால், மில்லினிய யுகத்திலும் சொற்ப காலத்திலும் ஜீவனுக்கான பரீட்சை யில் அதை முடிவு பரியந்தமும் செய்வார்கள்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

*உங்கள் கவனத்திற்கு*

சில கட்டுரை பகுதிகள்,
நமது அழைப்பிற்கும்,
இதுவரை கிடைத்த நிகழ்கால சத்தியத்திற்கும்
இணங்க, மாற்றம் செய்யப்பட்டுள்ளது

# “வழியும் சத்தியமும் ஜீவனும்”

*PT# 592, Jul-Aug 1984, pp. 50-53*

*நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்; குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்.*
*யோவா. 8:31,32,36)*

*1.* நம்முடைய கர்த்தராகிய யெஷுஆவின் முதலாம் வருகையில் அவர் யூத தேசத்தினிடத்திற்கு வந்தார். யூத தேசம் தேவனோடு உடன்படிக்கை பந்தத்திலுள்ள ஊழியக்காரரின் வீடாக இருந்தது. தேவனுடைய குமாரர்களாக ஆகும் முதல் சிலாக்கியமும் அவர்களுக்களிக்கப்பட்டிருந்தது *(யோவா. 1:12).* மேலும் அவர்களுக்கு அளிக்கப்படும் வெளிச்சத்திற்கு அவர்கள் எவ்வளவு விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருப்பார்களோ அதற்கேற்றவாறு அவர்களுடைய ஆசீர்வாதமும் இருக்கும். ஆனால் அவர்கள் யாவே தேவனுடைய குமாரர்களாக ஆகக் கூடியதாக இருப்பதற்கு முன், யெஷுஆ அவர்களுடைய மீட்பராக இருந்து, அவர்களுடைய அக்கிரமத்திற்காக ஒப்புரவாகுதல் செய்து, அதன் மூலம் அதற்கான வழியைத் திறப்பது அவசியமானதாக இருந்தது. அதைச் செய்வதற்காகவே அவர் வந்திருந்தார். ஆனால் அவர் இந்த வார்த்தைகளைச் சொன்னபோது அதை இன்னும் செய்யாதிருந்தார். தெய்வீக நோக்கங்களையும் ஏற்பாடுகளையும் புரிந்துகொண்டு, அவைகளுக்கு இசைவாகச் செயல்படுகிறவர்கள் விடுதலையாக்கப்படுவார்கள். அதாவது யூதர்களாக அவர்கள் மேலிருந்த தண்டனையிலிருந்தும், அவர்களுடைய மாம்ச பெலவீனங்களின் விளைவுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டு, தேவனோடு முழு இசைவிணக்கத்திற்குள் கொண்டு வரப்படுவார்கள்.

*2.* இந்தப் பெரிய சிலாக்கியமானது இவைகளெல்லாவற்றையும் விட மேலான ஒன்றை அர்த்தப்படுத்தினது என்று நாம் காண்கிறோம். அது இவைகளெல்லாவற்றையும் விட உயர்வான ஒன்றாகிய மேசியாவோடு உடன் சுதந்தரவாளிகளாக இருப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை அர்த்தப்படுத்தினது. ஆனால் அப்போது இந்த காரியங்களெல்லாம் இன்னும் ஒரு மறைக்கப்பட்ட இரகசியமாக இருந்தன. அக்காலத்தில் நம்முடைய கர்த்தர் ஒருவர் மட்டுமே அவைகளை அறிந்திருந்தார். அவர் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருந்ததால், இந்த காரியங்கள் அவருக்குத் தெளிவாக்கப்பட்டிருந்தன. அக்காலத்தில் புரிந்து கொள்ளப்படுவதற்குக் கடினமான பல காரியங்கள் இருந்தன. அப்போது திறக்கப்பட்டிருந்த ஜீவ வழியை “நெருக்கமான வழியாக” ஆக்குவதற்காகவே யெஷுஆ அவர்களிடம் உவமைகளினாலும், மறைபொருள்களினாலும் பேசினார். ஆகையால் எஜமானரின் சில வார்த்தைகளைக் குறித்துச் சிலர் இவ்வாறு கூறினதாக நாம் வேத வசனங்களில் வாசிக்கிறோம்: “இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள்? “யார் அதை விசுவாசித்திருக்கக் கூடும்? *(யோவா. 6:60).*

*3.* இங்கே விசேஷமாகக் குறிப்பிடப்பட்டிருந்த கடினமான உபதேசமானது, யெஷுஆவின் மாம்சம்



மெய்யான போஜனமாகவும், அவருடைய இரத்தம் மெய்யான பானமாகவும் இருந்ததென்பதாகவும், அவைகளைப் புசித்து பானம் பண்ணுவதின் மூலம் அவர்கள் நித்திய ஜீவனை அடைவார்கள் என்பதாகவும் இருந்தது *(யோவா. 6:54,55).* ஆகையால் அதற்குப்பிறகு அநேகர் அவரை விட்டு பின்வாங்கிப் போனார்கள் என்று நாம் வாசிக்கிறோம். அவர்கள் யெஷுஆவின் சீஷர்களாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தையே கைவிட்டார்கள். இவ்வாறாக அவர்களுக்கு எது நன்மையானது என்பதையே அறிந்துகொள்ளாதவர்களாக இருக்கும் அளவிற்கு குருடாக்கப்பட்டிருந்தார்கள். பொறுமையோடு அவரைத் தொடர்ந்து பின்பற்றுவதற்குப் பதிலாக, இவைகளெல்லாம் புத்தியீனமானவைகள்! எங்களுக்கு இது புரியவில்லை! என்று சொன்னார்கள்.

*4.* யெஷுஆ அவர்களுக்கு இந்த வார்த்தைகளைச் சொன்ன போது, காரியங்கள் இவ்வாறு இருக்குமென்று அவர் முன்னறிந்திருந்தார். அவர்களை விழிப்புள்ளவர்களாக இருக்கும்படி செய்ய அவர் விரும்பினார். அவர் சொன்ன வார்த்தைகளின் பொருள் இவ்வாறாயிருந்தது: “இந்த மனுஷன் பேசுகிறது போல் ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை” என்று நீங்கள் சொல்கிறீர்கள். வேதபாரகர்களும் பரிசேயர்களும் சொல்கிற வார்த்தைகளுக்கு முற்றிலும் வித்தியாசமான என் வார்த்தைகளை நீங்கள் ஏற்கனவே கேட்டிருக்கிறீர்கள். இப்போதும் தொடர்ந்து நிலைத்திருங்கள். இன்னும் கொஞ்சங் காலத்திற்குக் காத்திருங்கள். நீங்கள் இதைச் செய்தால் ஏற்ற காலத்தில் இந்த காரியங்களைப் புரிந்துகொள்வீர்கள். விசுவாசத்தை அப்பியாசியுங்கள், பொறுமையை அப்பியாசியுங்கள். நீங்கள் இந்த காரியங்களில் ஆர்வங் கொள்ள தொடங்கி இருக்கிறீர்கள். மேலும் நீங்கள் முழுமையாக என் சீஷர்களாக ஆகும்போது சத்தியத்தைப் பற்றிய அறிவு உங்களுக்கு அளிக்கப்படும். இந்தச் சத்தியம் உங்களை விடுதலையாக்கும். தேவனுடைய பிள்ளைகளுக்குரிய எல்லா ஆசீர்வாதங்களையும் சிலாக்கியங்களையும் இந்தச் சத்தியம் உங்களுக்கு அளிக்கும். இந்த ஆலோசனைக்கு செவிசாய்த்த சிலர் என்னே மேன்மையாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தார்கள்!

## ஆசீர்வாதங்கள் பெந்தெகொஸ்தே அன்று தொடங்கின

*5.* யெஷுஆவின் இந்த வார்த்தைகள் பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்கு மட்டுமல்ல,

அவரோடு ஒத்துணர்வு கொண்டு அவரிடத்தில் வந்த யூதர்களுக்குப் பொதுவாகச் சொல்லப்பட்டிருந்தன (யோவா. 8:31). நிக்கொதேமுவும் இவர்களில் ஒருவராக இருந்திருக்கக் கூடும். அவர் ஆவிக்குரிய காரியங்களில் இடறலடையக் கூடியவராயிருந்தார். ஒருவன் மறுபடியும் எப்படி பிறக்கக் கூடுமென்பதைப் புரிந்து கொள்ள இயலாதவராயிருந்தார் (யோவா. 3:1-12). அக்காலத்தில் பரிசுத்த ஆவி கொடுக்கப்படாதிருந்தது. "யெஷுஆ இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை" என்று நாம் வாசிக்கிறோம் (யோவா. 7:39). ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்" (1கொரி. 2:14) என்று அப்போஸ்தலர் பவுல் நமக்குச் சொல்கிறார்.

6. ஆனால் யெஷுஆவிடம் ஈர்க்கப்படுமளவிற்குப் போதுமான காரியங்களைச் சிலர் அவரில் கண்டார்கள். இவர்கள் நேர்மையான இருதயத்தோடு இவ்வாறு எண்ணினார்கள்: நிச்சயமாக அவருடைய வார்த்தைகள் உண்மையாயிருக்கின்றன. நம்முடைய தேசத்தைக் குறித்து அவர் செய்கிற கண்டனங்கள் உண்மையாயிருக்கின்றன. அவர் இந்த தீர்க்கதரிசனங்களை எவ்வாறு நிறைவேற்ற போகிறார் என்பது எங்களுக்குப் புரியவில்லை. ஆனால் நிலைத்திருங்கள் என்றும், பிற்காலத்தில் புரிந்து கொள்வீர்கள் என்றும் அவர் எங்களிடம் சொல்கிறார். சிலர் - "ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரர்கள்" (1கொரி.15:6) உறுதியாக நிலைத்திருந்தார்கள். யெஷுஆ வாக்குத்தத்தம் செய்ததைப் போலவே, மெய்யாகவே அவருடைய சீஷர்களாக இருக்கும் சிலாக்கியம் அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

7. பெந்தெகொஸ்தே வந்தபோது, யெஷுஆவின் வார்த்தையில் தொடர்ந்து நிலைத்திருந்த அனைவரையும் பரம பிதா ஏற்றுக்கொண்டார். அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு கர்த்தருடைய குடும்பத்திற்குள் ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள். அப்போது அவர்கள் ஆவிக்குரிய காரியங்களைக் காணத் தொடங்கினார்கள். அப்போது அவர்கள் பிரகாசிப்பிக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் எல்லா வெளிச்சமும் அவர்களுக்கு உடனடியாகக் கொடுக்கப்படவில்லை. நாட்களும் வருடங்களும் செல்ல செல்ல அவர்கள் படிப்படியாக முன்னேற்றமடைந்தார்கள். அவர்கள் மெய்யாகவே கிறிஸ்துவின் உண்மையான சீஷர்களாக இருந்தார்கள். யெஷுஆவை இவ்வாறு பின்பற்றுபவர்களை அங்கீகரிக்க பிதா பிரியமாயிருந்தார். அவர்கள் நியாயப் பிரமாண தண்டனையிலிருந்து விடுதலையாக்கப்படுவது மட்டுமல்ல, ஆதாமினால் வந்த தண்டனையிலிருந்தும் விடுதலையாக்கப்பட்டிருந்தார்கள் (ரோம. 8:1). அவர்கள் புது சித்தத்தையும் புது மனதையும் பெற்றுக் கொண்டார்கள். பரிசுத்த ஆவி அவர்களுக்குத் "தேவனுடைய ஆழங்களை" வெளிப்படுத்தினது.

8. நம்முடைய கர்த்தர் பிதாவிடம் செய்த ஜெபத்தில் "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" என்று சொன்னார் (யோவா. 17:17). இங்கே யெஷுஆ சத்தியம் என்ற வார்த்தையை உபயோகிக்கும் போது, பிதா தம்முடைய தெய்வீக திட்டத்தைப் பரிசுத்த ஆவியின் மூலம் வெளிப்படுத்துவதை அர்த்தப்படுத்தினார். உண்மையும் நன்மையுமான இருதயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அந்த சத்திய அறிவின் மூலம் அவர்களைப் பரிசுத்தமாக்கும் தாக்கம் உண்டாகும். குறிப்பாகச் சொன்னால் இந்த பரிசுத்தமாகுதல், அல்லது பிரத்யேகப்படுத்தப்படுதல் என்பது பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்துடன் தொடங்கினது. இந்நாள் வரை தொடர்ந்து கிரியை செய்துகொண்டு வருகிறது. ஒருவனுடைய வாழ்க்கையில் எந்த தாக்கத்தை உண்டு பண்ணுவதற்காகச் சத்தியம் திட்டமிடப்பட்டிருக்கிறதோ, அந்தத் தாக்கத்தை உண்டு பண்ண அவன் சத்தியத்திற்கு இடங்கொடுத்துக் கொண்டிருக்கும் வரை, இந்த பரிசுத்தமாகுதல் தொடர்ந்து முன்னேற்றமடையும்.

9. நம்முடைய பாட வசனத்திற்கும் (யோவா. 8:31) சற்று முன் குறிப்பிடப்பட்ட வசனத்திற்கும் (யோவா. 17:17) இடையில் ஒரு வித்தியாசம் இருப்பதை நாம் காண்கிறோம். யோவா. 17:17-ம் வசனத்தில் சொல்லப்பட்ட "வார்த்தை" ("உம்முடைய வசனம்") என்பது யாவே தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது. யோவா. 8:31-ம் வசனத்தில் வார்த்தை ("என் உபதேசம்") யெஷுஆவின் வார்த்தையாக இருக்கிறது. யெஷுஆ சொன்ன வார்த்தைகளின் பொருள் இவ்வாறாயிருக்கிறது: நீங்கள் என் வார்த்தையில் நிலைத்திருந்தால், பரம பிதாவை அதிக மதிகமாக அறிந்து கொள்வீர்கள். அவருடைய சித்தத்தையும் அவருடைய வழியையும் அவர் செயல்படும் முறைகளையும் அறிந்து கொள்வீர்கள். இவ்வாறாக நீங்கள் அவருடைய வார்த்தையை அறிந்து கொள்வீர்கள். எல்லா காரியங்களும் அவருடைய சித்தத்தை அதாவது பிதாவின் சித்தத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றன. நீங்களும் பிதாவின் சித்தத்தைக் கண்டுகொண்டு, அதைச் செய்யும்போது, பரிசுத்தமாகுதல் என்ற செயல்முறை உங்களில் தொடர்ந்து நடக்கும். நானே வழியாக இருக்கிறேன், நானே சத்தியமாக இருக்கிறேன், நானே ஜீவனாக இருக்கிறேன் என்று யெஷுஆ எல்லாரிடமும் சொல்கிறார். என் மூலம் மட்டுமே நீங்கள் பிதாவினிடத்திற்கு வரக்கூடும். என்னில் நிலைத்திருப்பதின் மூலம் மட்டுமே நீங்கள் மேன்மையான நிறைவை அடைவீர்கள்.

## நம்முடைய ஆசீர்வாதங்கள் எல்லாவற்றின் வழி

10. இவ்வாறாக நமக்கு எல்லா விதத்திலும் போதுமானவராகக் கிறிஸ்துவைத் தேவன் ஏற்படுத்தி இருக்கிறார் - அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் (நியாயமாகுதல்) பரிசுத்தமும் மீட்பு (விடுதலையு) மானார். (1கொரி.1:31)). அவர் நமக்காகச் செய்த பலியின் ஊழியத்தைப் பற்றி அறிந்துகொள்வதின் மூலம், நாம் நமக்குத் தேவையான ஞானத்தையும் போதனையையும் வழி நடத்துதலையும் முதலில் பெற்றுக்கொண்டோம். இந்த ஞானத்தைக் கொண்டு யெஷுஆவின் பலி புண்ணியத்தின் மூலம் நாம் பிதாவினிடத்திற்கு வந்தோம். மேலும் நம்முடைய பாதை முழுவதிலும் யெஷுஆவே நம்முடைய ஞானமாக இருக்கிறார். உலகத் தோற்றத்திற்கு முன்பே பரமபிதா ஒரு மகிமையான திட்டத்தை ஏற்படுத்தி இருந்தார். ஏதேனில் ஆதாமின் வீழ்ச்சிக்குப் பிறகு, அதை மறைமுகமாகத் தெரிவித்தார். ஏற்ற காலத்தில் ஏனோக்கின் மூலமும், ஆபிரகாமின் மூலமும் அதற்குப்பிறகு மோசேயின் மூலமும், தீர்க்கதரிசிகளின் மூலமும், அந்தத் திட்டத்தை மேலும் தெரிவித்தார். ஆனால் இதிலிருந்து உலகத்தார் எவ்வாறு நன்மையைப்

பெற்றுக் கொள்வார்கள் என்பது முற்றிலும் மறைக் கப்பட்டு, ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

## நம்முடைய ஞானமாகிய யெஷுஆ

*11.* ஆனால் யெஷுஆ வரும்வரை ஜீவமார்க்கம் திறக்கப்படாதிருந்தது, வெளிப்படுத்தப்படாதிருந்தது. "அவர் மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாமை யையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்." (2 தீமோ. 1:10). யெஷுஆ வருவதற்கு முன்பு சுவிசேஷத்தின் சாராம்சம் ஒருபோதும் அறிவிக்கப்படாதிருந்தது. அதைப் பற்றிய அறிவு மிகக் குறைவாகவே இருந்தது. இந்த இரட்சிப்பு "முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப் பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டது" என்று பவுல் அப்போஸ்தலர் சொல்கிறார் (எபி. 2:3). நம்முடைய கர்த்தர் அதைப் பிரசங்கிக்கத் தொடங்கினார். ஆனால் சுவிசேஷத்தின் மறைக்கப்பட்ட இரகசியம் பெந்தெகொஸ்தேவிற்குப் பிறகுதான் முழுமையாக வெளிப்படுத்தப்பட்டது. யெஷுஆவின் காரியத்திலும்கூட அவர் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற பிறகுதான் அவரும் அதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளத் தொடங்கினார். அதற்குப் பிறகுதான் அவர் ஜீவமார்க்கத்தையும் சாவாமையின் மார்க்கத்தையும் அறிவிக்கத் தொடங்கினார். ஆனால் அப்போது அவருடைய வார்த்தைகளும் உவமைகளாக இருந்தன. அவருடைய சீஷர்களுக்குப் பரிசுத்த ஆவி அளிக்கப்பட்ட பிறகுதான் அவர்கள் "தேவனுடைய ஆழங்களுக்குள்" பிரவேசிக்கும் திராணியைப் பெற்றுக் கொண்டார்கள்.

## நம்முடைய நீதியாகிய யெஷுஆ

*12.* யெஷுஆ நம்முடைய ஞானமாக இருப் பதற்குக் கூடுதலாக, நம்முடைய நீதியாகவும் ஆகிறார். அவர் நம்முடைய பாவங்களை மூடுகிறார். அவருடைய சொந்த பலியின் புண்ணியத்தை, அவருடைய நீதியைப் பரீட்சார்த்த ரீதியில் நம்முடைய கணக்கில் எழுதுகிறார். இவ்வாறு அவருடைய பலி புண்ணியம் நம்முடைய கணக்கில் பரீட்சார்த்த ரீதியில் எழுதப்படுவதினால் நாம் உண்மை நிகழ்வாக அல்லாமல், கருதப்பட்ட விதத்தில் நீதியான ஒரு நிலையை அடைகிறோம். தேவன் தாமே ஏற்படுத்தின இந்த வழியில் அந்த நீதியை அங்கீகரிக்க அவர் பிரியமாயிருக்கிறார்.

*13.* நம்முடைய கர்த்தர் எல்லோருக்கும் நீதியாக இருப்பதில்லை. மாறாக அவரை தன்னுடைய இரட்சக ராக ஏற்றுக்கொண்டு, பிதாவின் சித்தத்திற்கு முழுமை யாகக் கீழ்ப்படியும் நிலையை அடைந்தவர்களுக்கு மட்டுமே அவர் முழு நீதியாக இருக்கிறார். மத்தியஸ்தர் ராஜ்யத்தில் மற்றவர்கள் யெஷுஆவினிடத்திற்கு வருவார் கள். ஆனால் இக்காலத்தில் அவருடைய அடிச்சுவடுகளில் நடக்க அவரிடத்திற்கு வருபவர்கள் மட்டுமே விசுவாசத் தினால் நியாயமாகுதலையும் அதின் மேல் வைக்கப் படுகிற முத்திரையையும் பெற்றுக் கொள்வார்கள்.

## நம்முடைய பரிசுத்தமாகுதலாகிய யெஷுஆ

*14.* யெஷுஆவின் சீஷர்களாக ஆகிறவர்கள் எடுத்துக் கொள்கிற பிரதிஷ்டை என்னும் படி, வேதாக மத்தில் பரிசுத்தமாகுதல் என்று அழைக்கப்படுகிறது. ஆனால் யெஷுஆவின் மூலம் நமக்கு வருகிற பரிசுத்த மாகுதல் இது அல்ல. "நீங்கள் உங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொள்ளுங்கள்... நான் உங்களைப் பரிசுத்தமாக்குவேன்" (லேவி.20:7,8) என்று தேவன் சொல்கிறார். அதாவது நீங்கள் உங்களைப் பிரத்யேகப் படுத்திக் கொள்ளுங்கள், அப்போது நான் உங்களைப் பிரத்யேகப்படுத்துவேன்; நீங்கள் வர விரும்புகிற இந்த இடத்தில் நான் உங்களை வைப்பேன் என்று அவர் நமக்குச் சொல்கிறார். இவ்வாறாக யெஷுஆவின் மூலம் பிதாவினிடத்திற்கு வருகிற நம் அனைவருக்கும் யெஷுஆ நம்முடைய நியாயமாகுதலாக ஆவது மட்டு மல்ல, அவர் மூலமாய் நாம் பரிசுத்தமாகுதலையும் பெற்றுக் கொள்கிறோம். அதாவது முழுமையாகப் பிரத்யேகப்படுத்தப்பட்ட ஒரு நிலையை அடைகிறோம். நாம் அவருக்குள் ஏற்றுக் கொள்ளப்படுகிறோம். அவரு டைய கிருபையினாலும், அவர் நமக்காகப் பரிந்து பேசு வதின் உதவியோடும், முழுமையான முடிவான பரிசுத்த மாகுதலை அடைகிறோம்.

*15.* தேவன் நமக்குப் பரிசுத்த ஆவியை அளிப் பதின் மூலம் நம்மைப் பிரத்யேகப்படுத்துகிறார். இது வேதாகமத்தில் நம்முடைய சுதந்தரத்தின் முன்ருசி அல்லது அச்சாரம் என்று அழைக்கப்படுகிறது (உயிர்த் தெழுதலில் நாம் அதை முழுமையாக அனுபவிப்போம்). நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரம் இப்போதே நமக்குக் கொடுக்கப்படுவதின் நோக்கம் என்னவென்றால், நம்மில் ஏற்கனவே தொடங்கி வைக்கப்பட்டிருக்கிற பரிசுத்த மாகுதலின் செயல்முறை நிறைவடையும் வரை நாம் அதில் வளர வேண்டும் என்பதாகும். நாம் இதையும் கிறிஸ்துவின் மூலம் அடைகிறோம்.

## நம்முடைய விடுதலையாகிய யெஷுஆ

*16.* தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பாரைப் பொருத்தவரை, பரிசுத்தமாகுதலில் அவர்கள் திருப்தி கரமாக முன்னேற்றமடைந்தால் உயிர்த்தெழுதலில் அவர் களுடைய மன, ஒழுக்க, சரீர, கலை மற்றும் மத ரீதியான திறமைகள் எல்லாவற்றின் அபூரணத்திலிருந்து விடுதலை அடைவார்கள். இவ்வாறாகக் கிறிஸ்து அவர்களுடைய விடுதலையாகவும் ஆகிறார். அப்போது அவர்கள் தேவ னுடைய புத்திரர்கள் என்ற நிலையை முழுமையாகவும் நிறைவாகவும் அடைவார்கள்.

*17.* இவ்வாறாக இந்த காரியங்கள் எல்லா வற்றிலும் கிறிஸ்துவே மையமாக இருக்கிறார். அவர் மூலமாக மட்டுமே நாம் இந்த ஆசீர்வாதங்களை அடையக் கூடும். இந்த ஆசீர்வாதங்களைக் கொடுப்பவர் பிதாவாக இருந்தாலும், பிதாவின் பிரதிநிதியாக இருக்கிற அவரு டைய குமாரரின் மூலம் அவைகள் கொடுக்கப் படுகின்றன. யெஷுஆ பிதாவினிடமிருந்து பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டு அதை நமக்களிக்கிறார்.

*18.* "கர்த்தராகிய யெஷுஆவை எழுப்பின வராகிய" தேவன் "எங்களையும் (சபை வகுப்பாரையும்) யெஷுஆவைக் கொண்டு எழுப்புவார்" (2 கொரி. 4:14). அதாவது இதிலும் யெஷுஆ செயலியக்கியாக இருப் பார். ஆனால் தெய்வீக திட்டத்தின் சில அம்சங் களை யெஷுஆ தம்முடைய நாமத்திலே நிறைவேற்று வார். எடுத்துக்காட்டாக உலகத்தை ஆசீர்வதித்துத் தூக்கி நிறுத்தும் வேலையை யெஷுஆ செய்வார். இந்த முழு திட்டத்தின் காரண கர்த்தா பிதாவாக இருந்தாலும் உலகத் தாருக்கு இந்த ஆசீர்வாதம் குமாரரின் பலியின் மூலம்

மட்டுமே உண்டாகும். மில்லினிய யுகத்தின் ஊழியத்தை கிறிஸ்து நிறைவேற்றி, அதற்குப்பிறகு மனுகுலத்தைப் பிதாவினிடத்தில் ஒப்புவிப்பார் (1கொரி. 15:24).

19. ஆனால் தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பாருக்கு அவர் செய்த வேலை இதற்கு வேறுபட்டதாக இருக்கிறது: அவர்கள் குமாரரின் மூலம் பரிசுத்த ஆவி என்ற தெய்வீக தயவைப் பெற்றுக் கொண்டாலும், அந்த ஆவி அளிக்கப்படுவதற்கு குமாரர் முதன்மையான காரணர் அல்ல (தேவனே அதற்கு முதன்மையான காரணராக இருந்தார்). இந்த விசேஷித்த தெய்வீக தயவைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் செலுத்த வேண்டிய விலையானது, அவர்களுடைய ஜீவனைப் பலி செய்வதாக இருந்தது. தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பார் குமாரரிடமிருந்து இன்னும் நேரடியாகப் பெற்றுக் கொள்கிற காரியம் நியாயமாகுதலாக இருந்தது. ஆனால் அந்த நியாயமாகுதலும் பிதாவினாலான ஒன்றாக இருந்தது. அது உண்மை நிகழ்வான நியாயமாகுதலாக அல்லாமல், கணக்கில் எழுதப்பட்ட நியாயமாகுதலாக இருந்தது. உலகத்தார் தேவனுடைய தயவிற்கு வருவதற்கு முன்பே அவர்கள் தேவனுடைய தயவிற்குள் வந்து தேவனுக்கென்றும் ஆட்டுக்குட்டியானவருக்கென்றும் விசேஷித்த கனிகளாக இருக்கும்படிக்கு பிதா அவர்களுக்காகச் செய்த விசேஷித்த ஏற்பாடாக இருக்கிறது.

20. நம்முடைய தேவன் அற்புதமான தேவனாக இருக்கிறார். அவருடைய யுகங்களைப் பற்றிய மேன்மையான ஏற்பாடு வார்த்தைகளில் வர்ணிக்க முடியாத அளவிற்கு அற்புதமாக இருக்கிறது. சுவிசேஷ யுகத்திலும் அநேகருக்கு மறைக்கப்பட்டிருந்த இந்த மகிமையான காரியங்களைக் காணும்படிக்கு கண்களுக்குக் கலிக்கம் பெற்றுக் கொண்டதற்காக நம்முடைய இருதயங்கள் களிகூருகின்றன! குருடாக்கப்பட்டிருக்கிற கண்கள் எல்லாம் திறக்கப்பட்டு, செவிடாக்கப்பட்ட செவிகள் எல்லாம் திறவுண்டுபோம் என்று அறிந்து நாம் மகிழ்கிறோம்!

## "சத்தியத்திற்குச் செவியை விலக்குகிறார்கள்"

21. கர்த்தருடைய போதனைக்குச் செவி சாய்த்த திரளான ஜனங்களில் அந்த போதனை எப்போதுமே இரண்டு எதிர்மாறான விளைவுகளை உண்டு பண்ணினது: ஒரு வகுப்பார் அவரிடத்தில் ஈர்க்கப்பட்டார்கள், மற்றொரு வகுப்பார் அவரை விட்டு விலகிப் போனார்கள். பெருமையினாலும் அகந்தையினாலும் நிறைந்தவர்கள் கிறிஸ்துவின் போதனைகளை விட்டு விலகினார்கள். ஏனென்றால் அவர்களுடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருந்தன. அவர்கள் சத்திய வெளிச்சத்திற்கு இடங்கொடுத்தால், தங்கள் குணாம்சங்களை அதற்கேற்ப மாற்றிக் கொள்வது அவசியமாயிருந்திருக்கும். ஆகையால் அவர்கள் ஒளியை பார்க்கிலும் இருளை விரும்பினார்கள். இக்காலத்தில் ஊழியஞ் செய்கிறவர்களை போல், நம்முடைய கர்த்தரும் ஜனங்களின் ஆதரவையும் பங்களிப்பையும் சார்ந்திருந்திருந்தால், அவருக்குக் கிடைத்த உதவி மிகக் குறைவாகவும் நிலையற்றதாகவும் இருந்திருக்கும்.

22. சில நேரங்களில் திரளான ஜனங்கள் அவருடைய சாட்சியை ஏற்றுக் கொண்டாலும், அதற்குப் பிறகு அவர்கள் அவரை விட்டு விலகிப்போனார்கள். அவர் தெய்வீக சத்தியத்தின் பாடங்களைத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கையில், அவர்கள் இனி அவரோடு நடவாதிருந்தார்கள் (லூக். 4:14-29). சில நேரங்களில் "அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டு" திரளான ஜனங்கள் அவருடைய போதனைகளைப் பெற்றுக் கொண்டார்கள். இருந்தாலும் திரும்பத் திரும்ப அநேகர் அவரை விட்டு விலகிப் போனார்கள். மிக சிலர் மட்டுமே தொடர்ந்து அவரோடிருந்தார்கள் (யோவா. 6: 60 -69).

23. தாங்கள் சுவிசேஷத்தின் போதகர் என்று இக்காலத்தில் உரிமை பாராட்டுபவர்கள், தேவனுடைய ஆலோசனையில் எல்லாவற்றையும் அறிவிப்பதில் எஜமானரின் முன்மாதிரியைப் பின்பற்றினால், பல்வேறு பெயர் சபைகளில் என்னே குழப்பமுண்டாகும்! அவர்கள் விரைவாக மற்றவர்களால் விரும்பப்படாதவர்களாகவும், சபைகளைச் சீர்குலைக்கச் செய்கிறவர்களாகவும் குற்றஞ் சாட்டப்படுவார்கள். பகட்டினால் தேவனுடைய ஊழியத்திற்கும் கிறிஸ்துவின் போதனைகளுக்கும் தங்களை வெளிப்படையாக அர்ப்பணித்து, பெரிய அலங்காரமான ஆலயங்களை கட்டுகிற சபைகள் இவ்வாறான போக்கை ஆதரிப்பதில்லை. ஏனென்றால் பெயர் சபைகளிலுள்ளவர்கள் பெயர்பெற்ற போதகர்களின் சொற்பொழிவுள்ள பிரசங்கங்களைக் கேட்டு மகிழ்வதற்கு அங்கே செல்கிறார்கள். அந்த போதகர்களும் சபையாரின் விருப்பங்களையும் எண்ணங்களையும் அறிந்தவர்களாக, அவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் காரியங்களையே பிரசங்கிப்பார்கள். தாங்கள் விரும்புவதைக் கேட்பதற்காகச் சபையார் பணம் கொடுக்க மனதாயிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சத்தியத்தை விரும்புவதில்லை.

24. கர்த்தரைக் கொஞ்சங் காலத்திற்குப் பின்பற்றி, பின்பு அவரை விட்டு விலகிப் போனவர்கள் அவருடைய சீஷர்களாக நிலைத்திருக்கவில்லை. கர்த்தரும் அவர்களைத் தமது சீஷர்களாக ஏற்றுக் கொள்ளவில்லை. தாங்கள் அவருடைய சீஷரென்று அவர்களும் தொடர்ந்து உரிமை பாராட்டவில்லை. ஒரு சீஷன் என்பவன் ஒரு மாணாக்கனாகக், கற்றுக் கொள்கிற ஒருவனாக இருக்கிறான். மாபெரும் போதகராகிய கிறிஸ்துவின் மாணாக்கனாக இருப்பதை ஒருவன் விட்டுவிட்டால், அவன் இனி அவருடைய சீஷனாக இருப்பதில்லை. நம்முடைய கர்த்தரின் முதல் வருகையில் அவர் வந்திருந்தபோது, மனுஷர் அவருடைய நாமத்தை நிந்தித்துக் கொண்டிருக்கையில் இது வெளிப்படையாக இருந்தது. ஆனால் காலப்போக்கில், அவர் இனி பூமியிலில்லாதிருந்தபோது, மனசாட்சி இல்லாமல் அவருடைய போதனைகள் மனுஷருடைய தத்துவங்களோடு கலக்கப்பட்டு, அந்த தவறான போதனைகள் இனி நிந்திக்கப்படாதவைகளாகவும் வெறுமையானவைகளாகவும் ஆனபோது, தாங்கள் கிறிஸ்துவின் சீஷர்கள் என்று மனுஷர் உரிமை பாராட்ட தொடங்கினார்கள். அவருடைய போதனைகள் முற்றிலும் மறுதலிக்கப்பட்டதற்கு நீண்ட காலத்திற்குப் பிறகு இது நடந்தது.

## உண்மையான சீஷர்களுக்கு அளிக்கப்படும் வெகுமதிகள்

25. "மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்" என்று நம்முடைய கர்த்தர் சொல்லும்போது, அவர் உண்மையான மற்றும் பெயரளவிலான சீஷர்களை வித்தியாசப்படுத்தி காண்பிக்கிறார். நாம் தொடர்ந்து யெஷுஆவின் உண்மையான சீஷர்களாக இருக்க விரும்புவதால், அதற்குரிய நிபந்தனையாக அவர் குறிப்பிடு

வதைக் கவனிப்போமாக: "நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால், மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்". பெயரளவில் மட்டுமே கர்த்தருடைய சீஷனாக இருப்ப தென்ற மாய்மாலம் கர்த்தருக்கு அருவருப்பான ஒன்றா கும்.

*26.* கிறிஸ்தவ ஜீவியத்தின் முதல் படியா கிய மனந்திரும்புவதும், கிறிஸ்துவை நம்முடைய மீட்ப ராகவும் கர்த்தராகவும் ஏற்றுக் கொள்வதும், கிறிஸ்துவின் மூலமாக பிதாவுக்கு நம்மை முழுமையாக ஒப்புக் கொடுப்பதும் ஆசீர்வாதமான ஒன்றாகும். ஆனால் இந்த படியில் நாம் இருக்கும்போது, அதற்குரிய வெகுமதியைப் பெற்றுக் கொள்வதென்பது, உண்மையான சீஷர்களின் மனநிலையோடு நாம் அவருடைய வார்த்தையில் தொடர்ந்து நிலைத்திருப்பதை முற்றிலும் சார்ந்திருக்கும். தெய்வீக சத்தியத்தின் எளிமையை விட்டுவிட்டு, புதிதான தத்துவங்கள் மற்றும் சொந்த கருத்துகளை நாடுவதும், இவ்வுலகத்தின் மதிப்பீட்டில் ஞானிகளாகவும் மேன்மை யானவர்களாகவும் கருதப்பட விரும்புகிற மற்றவர்களின் கருத்துகளை அறிந்துகொள்ள முயலுவதும் மனுஷ னுடைய பெருமையின் இயல்பாக இருக்கிறது.

*27.* கர்த்தருடைய சீஷர்களாகத் தொடர்ந்து நிலைத்திருப்பதின் வெகுமதியானது, "நீங்கள் சத்தியத்தை அறிவீர்கள்" என்பதாகும். அதாவது நீங்கள் "எப்போதும் கற்றாலும் ஒரு போதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாய்" இருப்பதில்லை என்பதாகும் *(2 தீமோ. 3:7)*. பலர் இந்த தவறை செய்கிறார்கள்: கர்த்த ருடைய வார்த்தையில் தொடர்ந்து நிலைத்திராமல், கர்த்த ருடைய வார்த்தையைப் புறக்கணிக்கிற அல்லது தவறாகக் கூறுகிற பல்வேறு மனுஷ தத்துவங்களை ஆராய்ந்து, முரண்பாடான கோட்பாடுகளை உருவாக்கு கிறார்கள். இவ்வித மனுஷ தத்துவங்களில் சத்தியத்தை நாடுபவர்கள், அதைக் கண்டடைவார்கள் என்று எவ்வித வாக்குத்தத்தமும் கொடுக்கப்படவில்லை. அவ்வாறு செய்பவர்கள் ஒருபோதும் சத்தியத்தைக் கண்டடைவ தில்லை.

*28.* தெய்வீக சத்தியத்தைத் தேவனால் நியமிக் கப்பட்ட செயலியக்கிகளாகிய நம்முடைய கர்த்தர், அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் ஆகியவர் களின் போதனைகளில் மட்டுமே கண்டடைவோம். தேவ ஆவியினால் உந்தப்பட்டு எழுதின தீர்க்கதரிசிகள் மற்றும் அப்போஸ்தலர்களின் எழுத்துக்களில் கொடுக்கப்பட்ட கோட்பாடுகளில் தொடர்ந்து நிலைத்திருப்பது, அவை களை ஆராய்ந்து தியானிப்பது, அவைகளை முழுமையாக விசுவாசிப்பது, அவைகளுக்கேற்ப நம்முடைய குணாம்சங்களை விசுவாச உண்மைத்துவத்துடன் மாற்றிக் கொள்வது - இவைகளே கர்த்தருடைய "உபதேசத்திலே நிலைத்திருப்பதில்" அடங்கியுள்ள காரியங்களாயிருக் கின்றன. மேலும் பவுல் அப்போஸ்தலர் சொல்வதைப் போல் நம்முடைய சகோதரர்களின் மத்தியிலிருந்து கர்த் தர் எழும்பப்பண்ணுகிற உதவிகள் எல்லாவற்றிற்கும் செவி சாய்ப்பதும் இதற்கு முற்றிலும் இணக்கமாய் இருக்க வேண்டும் *(எபே. 4:11-15; 1 கொரி. 12:12-14)*. உண்மையான சீஷர்களின் பக்தி விருத்திக்கேதுவான உதவிகளைக், கர்த்தர் எப்போதுமே எழும்பப் பண்ணி இருக்கிறார், முடிவு பரியந்தமும் நிச்சயமாக எழும்பப் பண்ணுவார். ஆனால் ஒருபோதும் தவறாத தேவ வார்த்தையைக் கொண்டு அவர்களுடைய போதனை களைக் கவனமாக நிரூபிப்பது, ஒவ்வொரு உண்மையான சீஷனின் கடமையாகும்.

*29.* நாம் இவ்வாறு ஆர்வமும் உண்மையுமுள்ள சீஷர்களாகக் கர்த்தருடைய வார்த்தையில் நிலைத் திருக்கும் போது, மெய்யாகவே "சத்தியத்தை அறிந்து கொள்வோம்", "இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத் தில் *(நிகழ்கால சத்தியத்தில்)* உறுதிப்பட்டிருப்போம்", சத்தியத்திலே "வேரூன்றி நிலை பெற்றவர்களாயிருப் போம்", "விசுவாசத்திலே நிலைத்திருந்து", நம்மிலிருக்கிற "நம்பிக்கையைக் குறித்து உத்தரவு சொல்ல எப்பொ ழுதும் ஆயத்தமுள்ளவர்களாயிருப்போம்", "பரிசுத்தவான் களுக்கு ஒரு விசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத் திற்காகத் தைரியமாய் போராடுவோம்", "நல்ல போராட் டத்தைப் போராடுவோம்", "நல்ல அறிக்கை பண்ணுகிற வர்களாயிருப்போம்", முடிவு பரியந்தமும் "யெஷுஆ கிறிஸ்துவுக்கு நல்ல போர் சேவகர்களாய் தீங்கனுபவிப் போம்".

*30.* நாம் சத்தியத்தைப் பற்றிய அறிவை ஒரே முயற்சியில் பெற்றுக் கொள்ள முடியாது. மாறாகப் படிப்படியாகவும் நிதானமாகவும் சத்தியத்திற்குள் வழி நடத்தப்படுவோம். ஒவ்வொரு படியிலும் நிச்சயமான ஒரு முன்னேற்றம் இருக்கும். ஒவ்வொரு படியும் நம்மை அறிவிலும் ஸ்திரப்படுத்தப்பட்ட குணாம்சத்திலும் மேலும் முன்னேறுவதற்கு நம்மை இன்னும் உயர்வான அனுகூலமான நிலைக்குக் கொண்டு செல்லும். இவ் வாறுப் படிப்படியாக பெற்றுக் கொண்ட சத்தியம் நம்முடைய வாழ்க்கையில் பரிசுத்தமாக்கும் ஒரு வல்லமையாயிருக்கும். அது நீதி, சமாதானம், பரிசுத்த ஆவியில் சந்தோஷம், அன்பு, பணிவு நயம், விசுவாசம், பொறுமை மற்றும் ஒவ்வொரு நற்பண்பு மற்றும் குண நலன் என்னும் ஆசீர்வாதமான கனிகளை நம்முடைய வாழ்க்கையில் உண்டாக்கும். காலப்போக்கில் அவைகள் வளர்ந்து மகிமையான பண்புகளாகப் பக்குவமடையும்.

*31.* உண்மையான சீஷனானவன் இவ்வாறாகச் சத்தியத்தை அறிந்து கொண்டு, அதின் மூலம் பரிசுத்தமாக்கப்படுவது மட்டுமல்ல "சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்றும் கர்த்தர் சொல்லி இருக் கிறார். சத்தியத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் அவர் களுடைய ஆசீர்வாதமான அனுபவத்தின்மூலம் சத்தியத் தின் விடுதலையாக்கும் வல்லமையை ஓரளவிற்கு அறிவார்கள். உண்மையும் நன்மையுமான இருதயத் திற்குள் சத்தியத்தை ஓரளவிற்கு பெற்றுக்கொண்ட வுடனே அது பாவம், அறியாமை, மூடநம்பிக்கை, பயம், மனுஷரால் உருவாக்கப்பட்ட ஸ்தாபனங்கள் மற்றும் அமைப்புகள் என்னும் கட்டுகளை உடைக்கத் தொடங் கும். சத்தியத்தின் குணமாக்கும் கதிர்கள் நம்முடைய இருதயம் மற்றும் மனதின் இருண்ட மூலைகளையும் ஊடுருவி, நம்முடைய ஆத்துமா முழுவதையும் உற்சாகப் படுத்தும். அது நம்முடைய சரீரங்களை உயிர்ப்பிக்கும்.

## உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தரும்

*32.* பாவம் என்பது சத்திய வெளிச்சத்தைச் சகித்துக் கொள்ளாது. பாவத்தின் சீர்கேட்டை வெளிப் படுத்துவதற்குப் போதுமான வெளிச்சத்தைப் பெற்றுக் கொண்ட பிறகும், தொடர்ந்து பாவத்தில் ஜீவிப்பவர்கள் நிச்சயமாக அந்த வெளிச்சத்தை இழப்பார்கள். ஏனென் றால் அவர்கள் அந்த வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்ள தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள். இந்த வெளிச்சத் திற்கு முன்பாக, அறியாமையும் மூடநம்பிக்கையும் அற்றுப்போக வேண்டும். இவ்வாறு விடுதலையாக்கப் படுவதென்பது, என்னே ஒரு ஆசீர்வாதமான உணர்வாக

இருக்கிறது! ஆனால் கோடிக்கணக்கானவர்கள் இன்னும் தப்பறையின் குருடாக்கும் தாக்கத்தின் கீழ் இருக்கிறார்கள். தப்பறையினால் வஞ்சிக்கப்பட்டு, அவர்களை ஒடுக்குவதற்காகவும், இழிவுப்படுத்துவதற்காகவும் சாத்தான் உருவாக்கின மிகவும் இழிவான கருவிகளுக்கும் ஸ்தாபனங்களுக்கும் பயந்து, அவைகளை வணங்குகிறார்கள். ஏனென்றால் இந்த ஸ்தாபனங்கள் தேவனால் நியமிக்கப்பட்டவைகள் என்று அவர்கள் மாய்மாலமாக உரிமை பாராட்டுகிறார்கள். தேவனைப், பழிவாங்கும் ஒரு கொடூரராகவும், அவருடைய சிருஷ்டிகளில் பெரும் பான்மையோரை நித்திய வேதனைக்கோ, அர்ம-கெதோனில் நிர்மூலமாக்கப்படுவதற்கோ நியமிக்கிறவராகவும் சித்தரிப்பதினால், அவர்கள் தேவனைக் கண்டு பயப்படுகிறார்கள். சத்தியத்தைப் பெற்றிருக்கிறவர்களாகிய நாம், அந்த கொடூரமான கனவிலிருந்து விழித்தெழுப்பப்பட்டிருக்கிறோம், சாத்தானுக்கு அடிமைப்பட்ட நிலையிலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். வெளிச்சம் நம்முடைய இருளை அகற்றி விட்டது. அதற்காகத் தேவனுக்கு நன்றி கூறுவோம்!

*33.* நீண்ட காலமாக உலகத்தை ஆண்டுக் கொண்டிருந்த பெரிய சமுதாய மற்றும் மத ரீதியான அமைப்புகள், இப்போது தத்தளிக்கப் பண்ணப்பட்டுக் கொண்டிருக்கையில், முழு உலகத்தின் மேல் வருகிற பேரச்சத்தை நாம் கண்டாலும், அந்த பேரச்சத்திலிருந்தும் நாம் விடுவிக்கப்பட்டிருக்கிறோம். சிந்திக்கிற ஜனங்களெல்லாம் அராஜகம் மற்றும் தீவிரவாதத்தினால் வரக்கூடிய விளைவுகளை எண்ணி திகைப்படைகிறார்கள். நாம் ஒரு பயங்கரமான நெருக்கடியை நோக்கி விரைவாகச் சென்றுக்கொண்டிருக்கிறோம். நாம் அந்த நெருக்கடிக்கு மிகவும் சமீபமாய் வந்து, அதின் பேராபத்தை அதிகமதிகமாகக் காண்பதால் எல்லோரின் திகிலும் அதிகரிக்கிறது. இவைகள் எல்லாவற்றின் மத்தியிலும் கூட, கர்த்தருடைய வார்த்தையில் நிலைத்திருக்கும் கிறிஸ்துவின் உண்மையான சீஷர்கள், உலகத்தார் விரைவில் அனுபவிக்க வேண்டிய சச்சரவின் அச்சங்களைக் குறித்து ஒருபோதும் தவறாத தேவ வார்த்தையிலிருந்து முழு நிச்சயத்தைப் பெற்றுக் கொண்டதால், பயப்படாமல் இருப்பார்கள். அதற்கும் மேலாக, அதில் களிகூருவார்கள். ஏனென்றால் உலகத்தின் ஒழுக்க ரீதியான சூழ்நிலையைச் சுத்திகரிப்பதே இந்த பெரும் புயலை அனுமதிப்பதில் தேவனுடைய நோக்கமென்று அவர்கள் அறிவார்கள். மேலும் தேவனுடைய பரிபாலனத்தின் மூலம், இந்த புயல் கடந்து சென்ற பிறகு, நிலையான சமாதானம் உண்டாகுமென்றும் அவர்கள் அறிவார்கள். சத்தியத்தினால் போதிக்கப்பட்டவர்களாக அவர்கள் இந்த சூழ்நிலையின் அவசியத்தை உணருவார்கள். மனுஷருடைய கோபமும் தேவனுடைய மகிமையை விளங்கப்பண்ணவும், சகலமும் நன்மைக் கேதுவாக நடப்பிக்கவும் வல்லமையுள்ள தெய்வீக பரிபாலனத்தில் அவர்கள் தைரிய உறுதிக்கொள்வார்கள்.

*34.* *“நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்; குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்”* – என்னே ஒரு ஆசீர்வாதமான வாக்குத்தத்தம். அன்பானவர்களே, கர்த்தரிடமிருந்து இந்த அற்புதமான தயவைப் பெற்றுக் கொண்ட நாம், தொடர்ந்து அதில் நிலைத்திருக்க வேண்டும் அல்லவா? வஞ்சிக்கும் கோட்பாடுகளுக்கும் ஸ்தாபனங்களுக்கும் செவி சாய்க்காமல், கர்த்தருடைய இந்த தயவு நம்முடைய வாழ்க்கையில் ஆசீர்வாதமான கனிகளைக் கொடுக்கும்படி செய்ய வேண்டும் அல்லவா? இந்த வார்த்தையை எல்லா தாக்குதல்களிலிருந்தும் பாதுகாத்து, அதினால் வரும் நிந்தையைச் சுமந்து, எல்லா சூழ்நிலைகளிலும் அதற்கு விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருக்கவேண்டும் அல்லவா? இந்த மகிமையான வெளிச்சத்தை நாம் மதித்துணருகிறோம் என்பதை, நம்முடைய ராஜவிசுவாசத்தின் மூலமும், அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் நம்முடைய இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுவதின் மூலமும் நிரூபிப்போமாக.

*இப்பொழுது நாம் விடுதலை அடைந்திருக்கிறோம்,*
*நம்மேல் எந்த தண்டனையும் இல்லை;*
*விரைவில் யெஷுஆ நம்முடைய இரட்சிப்பைப் பூரணமாக்குவார்;*
*விரைவில் அவருடைய ராஜ்யம் எல்லோரையும் ஆண்டுகொள்ளும்,*
*விருப்பமுள்ள அனைவரையும் வீழ்ச்சியிலிருந்து இரட்சிக்கும்.*

★★★★★★★★★★★★★★★★★★★★★

# சிலுவையில் அறையப்படுதல் - மனிதனை மீட்டுக் கொள்வதற்கு ஏன் அவசியமானது

***BSQB p. 128-130***

*யெஷுஆ சிலுவையில் அறையப்படாமலேயே ஆதாமுக்காகவும் அவருடைய சந்ததிக்காகவும் தம்முடைய ஜீவனை ஈடு கிரயமாக பலி செய்திருக்க முடியாதா? அவர் வேறு ஏதேனுமொரு எளிதான வழியில் மரித்திருக்கக் கூடாதா?*

*1.* புறஜாதியார்களை மீட்டுக் கொள்வதற்கு நம்முடைய கர்த்தர் சிலுவையில் அறையப்படுவது தேவையாக இருந்திருக்காது. அதாவது அவர் மரத்தில் தூக்கப்பட்டு மரிக்க தேவையாயிருந்திருக்காது. அவர் மற்ற ஏதேனுமொரு விதத்தில் பலியின் மரணத்தை அனுபவித்திருந்தாலும் அது புறஜாதியார்களுக்குப் போதுமானதாக இருந்திருக்கும். கலா. *3:10-13* வரையுள்ள வசனங்களில் பரிசுத்த பவுல் நமக்கு விளக்குகிறார்: *“நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்துக்குட்பட்டிருக்கிறார்கள் [ஏனென்றால் நியாயப் பிரமாணத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற பூரண மனிதனுக்குரிய தரங்களை அபூரணமான எந்த ஒரு மனிதனும் நிறைவேற்ற முடியாது (லேவி. 18:5); ஆகையால் எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நியாயமாக்கப்படுவதில்லை (ரோம. 3:20; கலா.2:16; ரோம.7:10)] ... நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லை ... மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி கிறிஸ்து நமக்காகச் (யூதர்களுக்காக - யூதர்கள் மட்டுமே நியாயப்பிரமாணத்தின் கீழும் அதின் சாபத்தின் கீழும் இருந்தார்கள்) சாபமாகி (அவர்களுக்குப் பதிலாக), நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்.”*

*2.* இங்கே அப்போஸ்தலர் பின்வரும் காரியத்தைச் சுட்டிக் காட்டுகிறார்: முன்பு யூதர்களாயிருந்து; கிறிஸ்தவர்களானவர்கள், அதற்கு முன்பு யூத அல்லது

நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் இருந்தார்கள். அவர்கள் கிறிஸ்தவர்களான போது நியாயப்பிரமாணத்தின் தண்டனையிலிருந்து மீட்டுக் கொள்ளப்படுவது மட்டுமல்ல, அதின் ஆதிக்கத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டிருந்தார்கள். கலா.3:13-ம் வசனமானது, யெஷுஆ எல்லா இஸ்ரயேலர்களையும் மீட்டுக் கொண்டார் என்று சொல்லாமல் "நம்மை", அதாவது கிறிஸ்தவர்களான யூதர்களை மீட்டுக் கொண்டார் என்று சொல்கிறது. நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் இருந்தவர்களின் மேல் மட்டுமே நியாயப்பிரமாணத்தின் சாபமிருந்தது. ஏனென்றால், "நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறது" (ரோம. 3:19).

*3.* நியாயப்பிரமாணத்தின் கீழ் ஒருபோதும் இராதவர்களாகிய புறஜாதியார்கள், அதிலிருந்து விடுவிக்கப்படுவது அவசியமில்லை. ஒரு யூதன் நியாயப்பிரமாண உடன்படிக்கையிலிருந்து விடுவிக்கப்படுவதற்குப் பின் வரும் காரியங்களைச் செய்ய வேண்டும்: (1) யெஷுஆ கிறிஸ்து நியாயப்பிரமாண உடன்படிக்கையின் நிபந்தனைகளை நிறைவேற்றினார் என்று அவன் விசுவாசத்தின் மூலம் அங்கீகரிக்க வேண்டும். அதற்குப் பிறகு (2) யெஷுஆ கிறிஸ்துவைத் தன்னுடைய கர்த்தராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டு, பிரதிஷ்டை செய்வதின் மூலம் மோசேயிலிருந்து கிறிஸ்துவுக்குள் மாற்றப்பட வேண்டும். ஏனென்றால் "விசுவாசிக்கிற எவனுக்கும் (விசுவாசிக்கிற ஒவ்வொரு யூதனுக்கும்; நியாயப்பிரமாணத்தின் கீழ் இராத மற்றவர்கள் இங்கே குறிப்பிடப்படவில்லை) நீதியுண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் (நிறைவேறுதலாயிருக்கிறார்)" (ரோம 10:4), "சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்தார்" (எபே. 2:15). "நமக்கு (விசுவாசிக்கிற யூதர்களுக்கு) எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் (நியாயப்பிரமாணத்தை) குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணி அடித்தார் (அவரைப் பொறுத்த வரையிலும் அவர் மூலமாய் பிதாவினிடத்திற்கு வருகிற எல்லா யூதர்களைப் பொறுத்த வரையிலும் அதை முழுமையாக முடிவுக்குக் கொண்டு வந்தார்)" (கொலோ. 2:14).

*4.* கலா.3:13-ம் வசனத்தில் பவுல் அப்போஸ்தலர் பொதுவாக எல்லா கிறிஸ்தவர்களிடம் அல்லாமல், மோசேயை விட்டு கிறிஸ்துவுக்குள் வந்த கிறிஸ்தவர்களிடம் பேசுகிறார். அதாவது நியாயப்பிரமாணத்திலிருந்து வெளியேறி கிறிஸ்துவோடு பலியின் உடன்படிக்கைக்குள் வந்து, கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்களாக இருந்தவர்களிடம் பேசுகிறார். கிறிஸ்து புறஜாதியார்களாகிய நம்மை நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார் என்று சொல்லுவது உண்மையாக இருக்காது. ஏனென்றால் நாம் ஒருபோதும் நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்ததில்லை. யூதர்கள் மட்டுமே நியாயப்பிரமாணத்தின் கீழும், அதினால் அதின் சாபத்தின் கீழும் இருந்தார்கள். அப்போஸ்தலர் தன்னை ஒரு இஸ்ரயேலனாக இங்கே குறிப்பிடுகிறார். அவர்களில் சிலர் கலாத்தியாவிலும், சிலர் பாலஸ்தீனாவிலும், மற்றவர்கள் மற்ற இடங்களிலும் இருந்தார்கள். ஆகையால் "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்" என்று சொல்கிறார்.

*5.* கிறிஸ்து யூதர்களைத் தனி நபர்களாக அல்லாமல், ஒரே தேசமாகிய யூதர்கள் என்ற விசேஷித்த கருத்தில் அவர்களை மீட்டுக் கொண்டார். சீனாயில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் முழு தேசமும் உடன்பட்டது. ஆகையால் ஒரு தேசமாக அவர்களிடம் கோரப்படுகிற எல்லாவற்றையும் பூர்த்தி செய்து, இஸ்ரயேலை நியாயப்பிரமாணத்தின் கொடிய விளைவுகளிலிருந்து மீட்டுக் கொள்கிறவர், அந்த உடன்படிக்கையினால் விதிக்கப்பட்ட உச்சநிலையான தண்டனையை (மரத்திலே தூக்கப்படுவது) அனுபவிக்க வேண்டியதாயிருந்தது. ஆகையால் இஸ்ரயேலை அந்த தண்டனையிலிருந்து மீட்டுக் கொள்வதற்கு நம்முடைய கர்த்தர் சிலுவையில் அறையப்பட வேண்டியதாயிருந்தது.

*6.* மனுகுலத்தில் மீதியானவர்களைப் பொறுத்த வரை, அவர்கள் ஆதாமினால் வந்த மரண தண்டனையின் கீழ் பாடுபடுகிறார்கள். அந்த மரணம் எவ்வாறு நிகழ வேண்டுமென்று குறிப்பாக எதுவும் சொல்லப்படவில்லை. யூதர்களை விடுவிப்பதற்காக மட்டுமே சிலுவை மரணமென்ற விசேஷித்த வகையான மரணம் தேவையாயிருந்தது. ஒரே தேசமாக, மோசே என்னும் மத்தியஸ்தரின் மூலம் அவர்களோடு செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் நிமித்தம் இஸ்ரயேல் தேசம் முழுவதும் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் இருந்தது. "இஸ்ரயேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கையை" ஸ்தாபித்து, பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழுள்ள அனைவரையும் புது உடன்படிக்கைக்குள் கொண்டு வருவதின் மூலம், நம்முடைய கர்த்தர் யூத தேசம் முழுவதையும், நியாயப்பிரமாண உடன்படிக்கையைக் கடைபிடிக்க தவறினதிலிருந்தும், அந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையின் தண்டனையிலிருந்தும் மீட்டுக் கொள்வார் (எரே. 31:31-34; 32:37-40; ரோம. 11:26, 27).

*7.* மனுகுலத்தின் மகா உபத்திரவ காலம் (தானி. 12:1; மத். 24:21)முடிவுக்கு வந்த பிறகு இஸ்ரயேலின் புது உடன்படிக்கை தொடங்கி வைக்கப்படும். இந்த மகா உபத்திரவ காலம் 1914-ல் தொடங்கினது. மேலும் "யாக்கோபின் இக்கட்டிலும்", சாத்தானுடைய சாம்ராஜ்யம் இறுதியாகக் கவிழ்க்கப்படுவதிலும் உச்ச நிலையை அடைந்து முடிவுக்கு வரும் (எரே. 30:7-11; சங். 46; 72:4; ஏசா. 9:4; ஆகா. 2:6, 7; எபி. 12:26, 27). யூதர்களுக்காகவும் முழு மனுகுலத்திற்காகவும், தேவையான மீட்கும் கிரயத்தை நம்முடைய கர்த்தர் ஏற்கனவே செலுத்தி இருக்கிறார். ஆனால் அவர்களை அந்த தண்டனையிலிருந்து விடுவிப்பது என்ற கருத்திலும், அவர்களுக்காக மீட்கும் கிரயத்தை உபயோகிப்பது என்ற கருத்திலும், அவர் அவர்களை இன்னும் மீட்டுக் கொள்ளவில்லை. இந்த விசுவாச யுகத்தின் முடிவில் இரட்சிப்பை அருளும்படி இரண்டாம் தரம் பாவநிவாரண பலியாக அல்லாமல் தரிசனமாவார் (எபி. 9:28). விரைவில் அவர் இஸ்ரயேலர்களுக்காகவும் மனுகுலத்திற்காகவும் மீட்கும் கிரயத்தை உபயோகிப்பார். அப்போது புது உடன்படிக்கையின் நிபந்தனைகளின் கீழ் வரும் எல்லோரையும் ஆசீர்வதிப்பதற்காக அந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகள் செயல்படுத்தப்படும்.

★★★★★★★★★★★★★★★★★★★★

## கண்களால் காண முடியாத கோடு

*R336: page 2*

*1.* சுவிசேஷத்தினால் உண்டாகும் கட்டுப்பாடே முற்றிலும் பூரணமான சுயாதீனமாகும். நாம் நன்மை செய்யச் சுயாதீனமுள்ளவர்களாக இருக்கும்படிக்குத்

தெய்வீக கரம் நம்மைத் தீமையிலிருந்து கட்டுப்படுத்தி வைக்கிறது.

*2.* நான் சிறுவனாக இருந்தபோது, என் அயலகத்தார் ஒருவர், அவருடைய களஞ்சியத்தின் கூரையைப் பழுது பார்ப்பதைக் காணும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அந்த வேலையைச் செய்வதற்கு அவருடைய கூலியாளைக் கூரையின் மேல் அனுப்பினார். அந்த வேலைக்காரன் விழுந்து விடாதபடிக்குக் காக்கும் எவ்வித சாரமோ, ஆணியோ கூட அங்கே இல்லா திருந்தது. ஆனால் எங்கள் வீட்டிலிருந்து அவரைப் பார்க்கும்போது, அவர் ஒரு விசாலமான தரையில் நடப் பதைப் போல் எவ்வித கவலையும் அற்று நிமிர்ந்து அந்த பழைய கூரையில் மேலும் கீழும் நடப்பதைக் கண்டேன். அவர் இதை எவ்வாறு செய்கிறார் என்று அறிய நான் ஆர்வமாயிருந்தேன். ஆனால் நெருங்கி வந்து பார்க்கை யில், அவருடைய இடுப்பைச் சுற்றி உறுதியாகக் கட்டப் பட்டிருந்த பலமான கயிற்றைக் கண்டேன். அந்தக் கயிறு கூரையின் உச்சியிலிருந்து மறுபக்கம் கீழே தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டேன். அந்தக் களஞ்சியத்தின் பின்பக்கத்தில் நிற்கிற உரிமையாளர் தன் இரு கைகளால் அந்த கயிற்றை உறுதியாகப் பிடித்துக் கொண்டிருந்தார். அந்த வேலைக்காரன் கூரையின் விளிம்புக்குச் செல்ல விரும்பும் போது, கயிற்றைத் தளர்த்தி விடுங்கள், கயிற்றைத் தளர்த்தி விடுங்கள் என்று சத்தமிட்டுக் கூறு வார். உரிமையாளர் அதை உடனடியாகக் கேட்டு, வேலைக்காரனைப் பார்க்கவில்லையென்றாலும், மிகுந்த கவனத்துடன் அந்த கயிற்றைக் கொஞ்சங் கொஞ்சமாகத் தளர்த்தி விடுவார். வேலைக்காரன் திரும்ப அந்த செங்குத் தான கூரையின் மேல் ஏற விரும்பினால், அதற்குத் தகுந்தவாறு கூப்பிடுவார். உரிமையாளர் தளர்ந்த கயிற்றை இறுகப் பிடிப்பார். வேலைக்காரன் விசாலமான படிக் கட்டில் ஏறுவதைப் போல் பதட்டமின்றி ஏறுவார். அந்த நபர் ஒரு கயிற்றினால் கட்டப்பட்டு, மற்றொருவரின் வல்லமையால் உறுதியாகப் பிடிக்கப்பட்டிருந்தார். ஆனால் இந்த கட்டுப்பாடே உண்மையில் அவருக்குச் சுயாதீனத்தைக் கொடுத்தது என்று நாம் எளிதாகப் புரிந்து கொள்ளக்கூடும். உரிமைக்காரர் அந்த கயிற்றை எவ்வளவு கவனமாகப் பிடித்துக் கொண்டு கையாளுவாரோ அந்த வேலைக்காரரின் சுயாதீனம் அவ்வளவு முழுமையாக இருக்கும். அவர் கீழே விழுந்து காயமடையாதபடிக்கும், கூரையில் பாதுகாப்பாக மேலும் கீழும் சென்று வேலை செய்யும்படிக்கும் அவரைக் காக்கும். அவர் கட்டப் பட்டிருப்பதினாலே சுயாதீனமுள்ளவராக இருந்தார்.

*3.* அதுபோலவே சுவிசேஷத்தினால் உண்டா கும் கட்டுப்பாடுகளின் மூலம் தேவன் மனுஷனுக்குச் சுயாதீனத்தை அளிக்கிறார். அவர் தம்முடைய பாதுகாப் பின் கயிறுகளைக் கொண்டு விசுவாசியைக் கட்டுகிறார். அந்த விசுவாசி தன்னுடைய கடமைகளை நிறைவேற்றும் போது, தன் விருப்பத்தின் படி மேலும் கீழும் செல்லவும், உயரங்களை ஏறவும், ஆபத்தான பாதைகளில் நடக்கவும் எல்லா இடங்களிலும் பயமின்றி செல்லவும் அந்தக் கட்டுகள் அவனைப் பாதுகாக்கின்றன. இந்தக் கட்டுகள் எப்போதுமே நம்மை மேல்நோக்கி கொண்டுசெல்லும், ஒருபோதும் கீழ்நோக்கி கொண்டுசெல்லாது. பாவத் தினால் உண்டாகிற சுயாதீனத்தைக் குறித்துப் பலர் பெருமை பாராட்டுகிறார்கள். ஆனால் இந்த சுயாதீன மானது, கூரையின் மேலுள்ள அந்த நபரைக் கட்டின கயிற்றைத் தகர்ப்பதினால் உண்டாகும் சுயாதீனத்திற்கு ஒத்ததாக இருக்கிறது. அது தன் உறுதியான நிலையை இழப்பதற்கும், எவ்வித நிவாரணமும் இல்லாத அழிவுக் குள் விழுவதற்குமான முழு சுயாதீனமாக இருக்கிறது. ஆனால் தவறு செய்யக் கூடிய தன்னுடைய சித்தத்தை




முழு இருதயத்தோடு சுவிசேஷத்தின் தெய்வீக கட்டுப் பாடுகளுக்குக் கீழ்ப்படுத்துகிறவன், சுயத்தினால் தடுக்கப் படாமலும், பாவத்தினால் பாதிக்கப்படாமலும் என்றென் றைக்கும் சுயாதீனத்துடன் நடப்பான். மேலும் ஆயுதம் தரித்த காவல்காரர்களும் கோட்டையின் உறுதியான மதில்களும் கன்மலைகளின் அரண்களும்கூட நிச்சயிக்க முடியாத, பாதுகாப்பு மற்றும் சமாதானத்தின் சாட்சியைக் கொண்டு செல்வான்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

## அலெக்ஸாந்தர் என்பவரும் கடன் தீர்க்க வகையற்றுப் போன ஒருவனும்

***R313: page 2***




*1.* ரஷ்யா நாட்டின் பேரரசராக இருந்த ஒருவரைக் குறித்து இந்த நிகழ்வு சொல்லப்படுகிறது. “இந்தக் கடன்களை எல்லாம் தீர்ப்பது யார்?” என்ற கேள்விக்கு “அலெக்ஸாந்தராகிய நான்” என்று அவர் பதில் எழுதினார். அவருக்குக் கீழ்ப்பட்ட அதிகாரிகளில் ஒருவர் பெரிய கடனுக்குள்ளானார். அந்தக் கடனை தீர்க்க அவரால் முடியாதிருந்தது. தான் பட்ட கடனை கணக்குப் பார்த்து, முற்றிலும் நம்பிக்கை இழந்து, இந்தக் கடன்களை எல்லாம் தீர்ப்பது யார் என்று கணக்குப் பார்த்த தாளின் கீழ் எழுதி பிறகு தூங்கிவிட்டார்.

*2.* அந்தப் பேரரசர் அந்த அறையின் வழியாகச் செல்கையில் அந்த தாளையும், அதில் எழுதப்பட்டிருந்த கேள்வியையும் கவனித்து, தாராள குணத்தோடு ஒரு பேனாவை எடுத்து “அலெக்ஸாந்தராகிய நான்” என்று எழுதி, அந்த அதிகாரியின் தூக்கத்தைக் கலைக்காமல் அமைதியாகச் சென்றுவிட்டார். கடன்பட்ட அந்த நபர் விழித்து, தன்னுடைய கடன்கள் எல்லாம் தீர்க்கப்பட்ட தைக் கண்டபோது அவர் மனதில் தோன்றின உணர்வு களை வார்த்தைகளினால் விவரிக்கவே முடியாது.

*3.* பாவியான ஒருவனும் தன்னுடைய நிலை யைக் கண்டு, ரஷ்யா நாட்டின் அந்த அதிகாரியைப் போலவே, “இந்த கடன்களை எல்லாம் தீர்ப்பது யார்?” என்கிறான். “யெஷுஆ எல்லா கடன்களையும் தீர்த்து விட்டார்” என்று பதிலளிக்கக் கூடியவர்களாக நாம் இருப் பதற்காகத் தேவனுக்கு நன்றி கூறுவோம். அவர் நம் முடைய மீறுதல்களின் நிமித்தம் காயப்பட்டார். அவரு டைய தழும்புகளால் நாம் குணமாகிறோம். “நான், நானே உன் மீறுதல்களை குலைத்துப் போடுகிறேன்” (ஏசா. 43: 25) என்று யெஷுஆ நம்முடைய பாவங்களின் பட்டிய லின் கீழ் எழுதுகிறார்.

# மில்லினிய வேதாகம சத்திய சகோதரர்களின் ஐக்கிய கூட்டம்
## புதுச்சேரி கன்வென்ஷன் - பிப்ரவரி 2026

ஒன்றான மெய் பிதாவாகிய யாவே தேவனுடைய கிருபையால், நமது மில்லினிய வேதாகம சத்திய இயக்கத்தின் ஐக்கிய கூடுகையானது இந்த வருடம் பிப்ரவரி மாதம், 13,14 மற்றும் 15 ஆகிய மூன்று நாட்கள் புதுச்சேரி, காலாப்பட்டிலுள்ள *Cluny Prashant Vanam, Community hall*-ல் நடைபெற்றது.

*13ஆம் தேதி: வரவேற்பு & ஆரம்ப ஜெபம் - Br.AT, மற்றும் முடிவு ஜெபம்,ஆசீர்வாதம்; - Br.SK.*

*14ஆம் தேதி: ஆரம்ப ஜெபம் - Br.AB மற்றும் முடிவு ஜெபம்,ஆசீர்வாதம் - Br.YR.*

*15ஆம் தேதி: ஆரம்ப ஜெபம் - Br.PM மற்றும் முடிவு ஜெபம்,ஆசீர்வாதம்; - Br.GT*

சகோ. ராயப்பன், சகோ. பீட்டர் மற்றும் சகோ. மகிமைதாஸ் ஆகியோர் காலைத்தீர்மானம் மற்றும் விசேஷித்த பொருத்தனையை வாசித்தார்கள்.

| Discourse No. | Discourse topic | Reference | Duration | Discourse delivered by |
|---|---|---|---|---|
| | **13.02.26** | | | |
| D1 | மன்னா –1யோவான் 4:16 | DHM- FEB 29 | 45 min | Br.PM |
| D2 | நம்முடைய சொந்த இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுவது -பிலிப் 2:12 | PT# 362, Feb 1949 | 60 min | Br.YR |
| D3 | வேதாகமத்தில் குறிக்கப்பட்ட நரகம் - பாகம்-1 (heading 1.1; 1.2; 1.3; 2.1.1 to 2.1.8) | E Vol.16, Chap.IV,pg.206-234 | 90 min | Br.DB |
| D4 | வேதாகமத்தில் குறிக்கப்பட்ட நரகம் - பாகம்-2 (heading 2.1.9; 2.1.10; 2.1.10.1) | E Vol.16, Chap.IV,pg.208-234 | 75 min | Br.AD |
| D5 | வேதாகமத்தில் குறிக்கப்பட்ட நரகம் - பாகம்-3 (heading 3.1; 3.1.1 to 3.1.12) | E Vol.16, Chap.V | 75 min | Br.LG |
| D6 | வேதாகமத்தில் குறிக்கப்பட்ட நரகம் - பாகம்-4 (heading 3.2; 3.3) | E Vol.16, Chap.V | 75 min | Br.AT |
| D7 | வேதாகமத்தில் குறிக்கப்பட்ட நரகம் - பாகம்-5 (heading 5.9 & 5.10) | HE 1923, Pg.32; BS QB, Pg.389-395 | 75 min | Br.NJ |
| | **14.02.26** | | | |
| D8 | மன்னா – எபேசியர் 6:18 | DHM- NOV 27 | 45 min | Br.GT |
| D9 | வேதாகமத்தில் குறிக்கப்பட்ட நரகம் - பாகம்-6 (heading 5.11 to5.15) | BS QB, Pg.318-320; Pg.608,609; Pg.14, 592 | 75 min | Br.SK |
| D10 | வேதாகமத்தில் குறிக்கப்பட்ட நரகம் - பாகம்-7 (heading 4.1; 4.1.1.1 to 4.1.1.5) | E Vol.16, Chap.VI | 90 min | Br.DB |
| D11 | வேதாகமத்தில் குறிக்கப்பட்ட நரகம் - பாகம்-8 (heading. 4.1.2 & 4.1.3) | E Vol.16, Chap.VI | 75 min | Br.TE |
| D12 | வேதாகமத்தில் குறிக்கப்பட்ட நரகம் - பாகம்-9 (heading 4.1.4 & 4.2) | E Vol.16, Chap.VI | 75 min | Br.TR |
| D13 | வேதாகமத்தில் குறிக்கப்பட்ட நரகம் - பாகம்-10 (heading 5.1 to5.4) | BS QB, Pg.161-163; Pg.516-519; Pg.42-43. | 75min | Br.AT |
| D14 | வேதாகமத்தில் குறிக்கப்பட்ட நரகம் - பாகம்-11 (heading 5.5 to5.8) | BS QB, Pg.520-525; Pg.42-43; HE 1923, Pg.31,51. | 75 min | Br.GL |
| | **15.02.26** | | | |
| D15 | மன்னா –1யோவான் 2:5 | DHM- FEB 15 | 45 min | Br. AB |
| D16 | வேதாகமத்தில் குறிக்கப்பட்ட நரகம் - பாகம்-12 | E Vol.14, Pg.324,370,371; E Vol.9, Pg.361-373, PT 1924,pg.160 | 75 min | Br.GL |
| D17 | வேதாகமத்தில் குறிக்கப்பட்ட நரகம் கருத்தாராய்வு பாடம் -சுருக்கம் | ----------------- | 90 min | Br.DB |

இந்த ஐக்கிய தியானங்களில் ப்ரான்ஸ் சகோதர, சகோதரிகள் மற்றும் புதுச்சேரி, கோவா, சென்னை, திருவள்ளூர், கோயம்புத்தூர், பெங்களூரு, மும்பை, துபாய், லண்டன் மற்றும் ஜெர்மனி ஆகிய இடங்களிலிருந்தும் சகோதர, சகோதரிகள் *ZOOM* மூலம் கலந்துகொண்டனர். தேவனுடைய மேலான பரிபாலன வழி நடத்துதலுக்காக ஸ்தோத்திரம்.

## பெங்களூரு கன்வென்ஷன்

**கர்த்தருக்குச் சித்தமானால் "மில்லினிய வேதாகம சத்திய இயக்கத்தின்" சகோதர ஐக்கியக் கூட்டம், பெங்களூரில் ஆகஸ்ட் மாதம் 21, 22 & 23 தேதிகளில் (வெள்ளி, சனி, ஞாயிறு ) நடைபெறும்.**


## புது உடன்படிக்கை

*Monthly newsletter published by the brethren of the Millennial Bible Truth Movement*
*Website: www.mbtm.in*